




# தின பூமி
thinaboomi.com






சென்னை, ஞாயிறு, அக்டோபர் 06, 2024 · சென்னை · மதுரை · திருச்சி · கோவை · நெல்லை · சேலம் · வேலூர் · பாண்டிச்சேரி · பக்கம் 08 · ₹ 3.00

**இஸ்ரேல் வான்வழி தாக்குதல்: ஹமாஸ் ஆயுதக்குழுவின் முக்கிய தளபதி குடும்பத்துடன் பலி**
...2-ம் பக்கம்

**இந்தியாவை ஒரு குடும்பம் மட்டுமே ஆள வேண்டும் என நினைக்கிறார்கள்: காங்கிரஸ் மீது பிரதமர் குற்றச்சாட்டு**
...3-ம் பக்கம்

**3 போட்டிகள் கொண்ட தொடர்: இந்தியா - வங்காளதேசம் இன்று முதல் டி-20 போட்டியில் மோதல்**
...7-ம் பக்கம்





● மகாராஷ்டிரா சென்ற பிரதமர் நரேந்திர மோடி, வாஷிம் பகுதியில் உள்ள ஜகதாம்பா மாதா கோவிலில் பூஜை செய்த பிறகு அங்கு வைக்கப்பட்டிருந்த முரசை கொட்டி இசைத்த காட்சி.

### தமிழகத்தின் வட பகுதிகளில் அதிக மழைக்கு வாய்ப்பு:

# வடகிழக்கு பருவமழை 15-ம் தேதி தொடக்கம்

## இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

புதுடெல்லி, அக். 06-

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை வரும் **15-ம்** தேதி தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், தமிழகத்தின் வட பகுதிகளில் இயல்பான அல்லது இயல்பை விட அதிகமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

**3 மாதங்களுக்கு...**

வடகிழக்கு பருவமழை அக்டோபர் 3-வது வாரத்தில் தொடங்க வாய்ப்பு உள்ளது என்றும், அக்டோபர் 4-வது வாரத்தில் மழை அளவு அதிகரிக்கும், 3 மாதங்களுக்கு மழை இருக்கும் என்றும் தென்மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. இந்தநிலையில் வருகிற 15-ம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**இயல்பைவிட...**

வடகிழக்குப் பருவமழையைப் பொருத்தவரை கேரளா, தமிழகம், தெற்கு கர்நாடகா, ராயலசீமா, ஆந்திரப் பிரதேசத்தில் இயல்பைவிட மழை அதிகமாக பதிவாக வாய்ப்புள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம் தமிழகத்தின் வட பகுதிகளில் இயல்பான அல்லது இயல்பை விட அதிகமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக கணித்துள்ளது.

**கீழடுக்கு சுழற்சி...**

இதற்கிடையே இன்று தமிழகத்தில் 17 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆந்திர கடலோரப்பகுதிகளை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால் இன்று தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

**கனமழைக்கு வாய்ப்பு...**

நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், கரூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, விருதுநகர், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

நாளை 7-ம் தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, சேலம், நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, விருதுநகர், பெரம்பலூர், அரியலூர், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

இவ்வாறு வானிலை மையம் தெரிவித்துள்ளது.

### மகாராஷ்டிராவில் ரூ.23,300 கோடியில்

# பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்தார் பிரதமர் நரேந்திர மோடி

மும்பை, அக். 06-

மகாராஷ்டிரா மாநிலத்தில் ரூ. **23,300** கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார்.

பிரதமர் மோடி ஒரு நாள் சுற்றுப்பயணமாக நேற்று மகாராஷ்டிரா மாநிலத்திற்கு சென்றார். நாண்டெட் விமான நிலையத்திற்கு சென்ற அவர், பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் வாஷிம் பகுதிக்கு சென்றடைந்தார். அங்குள்ள ஜகதாம்பா மாதா கோவிலில் தரிசனம் செய்த பின்னர் சந்த் சேவலால் மகாராஜ் மற்றும் சந்த் ராமாராவ் மகாராஜ் ஆகியோரின் நினைவிடங்களுக்கு சென்று அஞ்சலி செலுத்தினார்.

அதனை தொடர்ந்து பஞ்சாரா சமூகத்தினரின் பெருமைகளை பறைசாற்றும் வகையில் உருவாக்கப்பட்டு இருந்த பஞ்சாரா விராசதத் அருங்காட்சியகத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார். இதன் பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ் 9.4 கோடி விவசாயிகளுக்கு ரூ. 20,000 கோடி நிதியை பிரதமர் மோடி விடுவித்தார்.

தொடர்ந்து நமோ ஷேத்காரி மகாசன்மன் நிதி யோஜனா திட்டத்தின் கீழ் ரூ. 2,000 கோடி நிதியை பிரதமர் மோடி விடுவித்தார். மேலும் ரூ.1,920 கோடி மதிப்பிலான 7,500-க்கும் மேற்பட்ட விவசாய உள்கட்டமைப்பு திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார்.

அதோடு 9,200 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை பிரதமர் தொடங்கி வைத்தார். இதன் மொத்த வருவாய் சுமார் 1,300 கோடி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகள் தொடர்பான ரூ.23,300 கோடி மதிப்பிலான திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்துள்ளார்.

மேலும் மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மொத்தம் 19 மெகாவாட் திறன் கொண்ட 5 சோலார் பூங்காக்களை பிரதமர் மோடி திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியின்போது, மகாராஷ்டிரா அரசின் பெண்களுக்கான நிதி உதவி திட்டத்தில் பயன் பெற்ற பயனாளிகளை பிரதமர் மோடி கவுரவித்தார்.

### ஒரே கட்டமாக 90 தொகுதிகளில் நடந்தது:

# அரியானா சட்டசபை தேர்தலில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு

சண்டிகார், அக். 06-

அரியானா சட்டசபை தேர்தலை முன்னிட்டு நேற்று **90** சட்டசபை தொகுதிகளில் பலத்த பாதுகாப்புடன் நடந்த வாக்குப்பதிவில் **61** சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

**ஒரே கட்டமாக...**

அரியானாவில் 90 சட்டசபை தொகுதிகள் உள்ளன. ஒரே கட்டமாக தேர்தல் நடக்கிறது. 1,031 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். அவர்களில், முதல்வர் நயாப் சிங் சைனி, எதிர்க்கட்சி தலைவர் பூபிந்தர் சிங் ஹூடா, ஜனநாயக ஜனதா கட்சி தலைவர் துஷ்யந்த் சவுதாலா, லோக் தளம் தலைவர் அபய்சிங் சவுதாலா, மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் ஆகியோர் முக்கியமான வேட்பாளர்கள் ஆவர்.

**4 முனை போட்டி...**

மாநிலம் முழுவதும் 20 ஆயிரத்து 629 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 2 கோடிக்கு மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். நேற்று காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை வாக்குப்பதிவு நடைபெற்றது. 90 தொகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அரியானா சட்டசபை தேர்தலில், பா.ஜனதா, காங்கிரஸ், ஆம் ஆத்மி ஆகிய கட்சிகள் தனித்து போட்டியிடுகின்றன. லோக்தளம்-பகுஜன் சமாஜ் கட்சி, ஜனநாயக ஜனதா கட்சி-ஆசாத் சமாஜ் கட்சி ஆகியவை கூட்டணியாக போட்டியிடுகின்றன. இங்கு 4 முனை போட்டி நிலவுகிறது.

**காங்., நம்பிக்கை...**

எதிர்க்கட்சியான காங்கிரஸ் 89 தொகுதிகளிலும், அதன் கூட்டணிக் கட்சியான மார்க்சிஸ்ட் ஓரிடத்திலும் களத்தில் உள்ளன.

இதுதவிர, ஆம் ஆத்மி, இந்திய தேசிய லோக் தளம், ஜனநாயக ஜனதா கட்சி ஆகியவையும் களத்தில் உள்ளன. இருப்பினும், பாஜக, காங்கிரஸ் இடையே முக்கியப் போட்டி நிலவி வருவதாக அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். மாநிலத்தில் 10 ஆண்டுகளாக பாஜக ஆட்சியில் இருப்பதால், இம்முறை மக்கள் தங்களுக்கு வாய்ப்பளிப்பார்கள் என்பது காங்கிரஸின் நம்பிக்கையாக உள்ளது.

**வரும் 8-ம் தேதி...**

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கிய நிலையில் மக்கள் நீண்ட வரிசையில் நின்று ஆர்வமுடன் தங்களது ஜனநாயக கடமையை ஆற்றினர். இந்நிலையில், வாக்குப்பதிவு நேற்று மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. இதையடுத்து வாக்கு எந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லும் பணிகள் நடைபெற்றன.

தேர்தல் நிறைவடைந்துள்ள நிலையில் தேர்தலில் பதிவான வாக்குகள் 8ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அரியானா சட்டசபை தேர்தலில் 61 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

### சாம்சங் தொழிலாளர்கள், நிறுவனத்துடன்

# 3 தமிழக அமைச்சர்கள் நாளை பேச்சுவார்த்தை

சென்னை, அக். 06-

சாம்சங் தொழிலாளர்கள் போராட்டத்தில் விரைந்து தீர்வு காண முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியதை அடுத்து நாளை 3 தமிழக அமைச்சர்கள் சாம்சங் நிறுவனம் மற்றும் தொழிலாளர்கள் உடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

**போராட்டத்தில்....**

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் உற்பத்தி ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் கடந்த 9-ம் தேதி முதல் ஆலைக்கு அருகே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதிக சம்பளம், பணி நேரம் குறைப்பு மற்றும் ஆலையில் சங்கத்திற்கான அங்கீகாரம் ஆகியவற்றை வலியுறுத்தி போராட்டம் நடந்து வருகிறது. போராடும் தொழிலாளர்கள் பணிக்கு திரும்ப வேண்டும் என ஆலை நிர்வாகம் தெரிவித்தது. அவர்கள் வேலைக்கு வராவிட்டால் சம்பளம் பிடித்தம் மற்றும் பணி நீக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சாம்சங் நிறுவனம் தெரிவித்தது. இருப்பினும் தொழிலாளர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

**விரைந்து தீர்வு காண...**

இந்நிலையில், சாம்சங் தொழிலாளர்கள் போராட்ட விவகாரத்தில் விரைந்து தீர்வு காண வேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தி உள்ளார். ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாத நிலையில், அமைச்சர்கள் டிஆர்பி.ராஜா, தா.மோ.அன்பரசன், கணேசன் ஆகியோர் தலையிட்டு தீர்வு காண முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். சாம்சங் நிறுவனம் மற்றும் தொழிலாளர்கள் உடன் நாளை அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

### இந்திய விமானப்படை தினத்தை முன்னிட்டு

# மெரினா கடற்கரையில் இன்று சாகச நிகழ்ச்சி

## பொதுமக்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கம்

சென்னை, அக். 06-

சென்னை மெரினா கடற்கரையில் இன்று விமானப் படை சாகச நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த நிகழ்வுகளை காண பொதுமக்கள் நலன் கருதி, அண்ணா சதுக்கத்திற்கு மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இந்திய விமானப்படை தினத்தை முன்னிட்டு இன்று 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று, சென்னை மெரினா கடற்கரையில் நடைபெறும் விமானப்படை சாகச நிகழ்வுகளை காண வரும் பொதுமக்களின் நலன் கருதி, மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பாக காலை 8:00 மணி முதல் சென்னையின் பல்வேறு பகுதிகளில் இருந்து அண்ணா சதுக்கத்திற்கு வழக்கமாக இயக்கப்படும் 120 பேருந்துகளுடன் கூடுதலாக 75 பேருந்துகளும், அரசினர் பூங்கா மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் டி.எம்.எஸ் மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 25 சிற்றுந்துகளும் இயக்கப்பட உள்ளது.

அரசினர் பூங்கா மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து சென்னை பல்கலைக் கழகம் வரை 3 நிமிட இடைவெளியில் சிற்றுந்துகளும், அதே போல், டி.எம்.எஸ் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள வி.எம்.தெரு வரை 2 நிமிட இடைவெளியில் மொத்தம் 25 சிற்றுந்துகள் இயக்கப்பட உள்ளன.

மேலும், முக்கிய பேருந்து நிலையங்களில் அலுவலர்களை நியமித்து பேருந்துகள் இயக்கத்தினை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் இந்த பேருந்து வசதியினை பயன்படுத்தி சிரமமின்றி பயணிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காஷ்மீரில் ஊடுருவ முயற்சி முறியடிப்பு:

# 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

ஜம்மு, அக். 06-


ஜம்மு காஷ்மீர் எல்லையில் ஊடுருவ முயன்ற **2** பயங்கரவாதிகளை ராணுவ வீரர்கள் சுட்டுக் கொன்றனர்.

இது தொடர்பாக ஸ்ரீநகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் சினார் கார்ப்ஸ் ராணுவப் பிரிவு வெளியிட்டுள்ள டுவிட்டர் தள பதிவில் கூறப்பட்டிருப்பதாவது, ஜம்மு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் குகல்தார் என்ற பகுதியில் பயங்கரவாதிகள் ஊடுருவ முயல்வதாக கிடைத்த ரகசிய தகவலை அடுத்து இந்திய ராணுவமும், ஜம்மு காஷ்மீர் காவல்துறையும் இணைந்து நடவடிக்கையைத் தொடங்கின.


சந்தேகத்திற்கிடமான செயல்பாட்டைக் கண்டறிந்த பாதுகாப்புப் படையினர், அவர்களுக்கு சவால் விடுத்தனர். இதையடுத்து, பயங்கரவாதிகள், பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். எச்சரிக்கை அடைந்த பாதுகாப்புப் படையினர், துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்த தாக்குதலில் இரண்டு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அங்கு நடத்தப்பட்ட சோதனையில், பயங்கரவாதிகளின் ஆயுதக் கிடங்கு கண்டு பிடிக்கப் பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டன. தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது என்று அந்த பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| -808.65 | -235.50 |
| பாயின்ட் 81,688.45 | பாயின்ட் 25,014.60 |



**தங்கம்**
1 சவரன் ₹56,960
1 கிராம் ₹7,120



**வெள்ளி**
1 கிலோ ₹103,000
1 கிராம் ₹103.00

**டாலர்** ₹84.03

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### லெபனானில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல்:

# ஹமாஸ் ஆயுதக்குழு முக்கிய தளபதி குடும்பத்துடன் பலி

**பெரூட், அக். 06-**

லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஹமாஸ் ஆயுதக்குழுவின் முக்கிய தளபதி குடும்பத்துடன் கொல்லப்பட்டார்.



காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டுள்ளது.

அதேபோல், ஹமாஸ் ஆயுதக்குழுவினர்களால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பணய கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், இன்னும் 100க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் ஹமாஸ் வசம் பணய கைதிகளாக உள்ளனர். அதேவேளை, இந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 41 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளும் ஆதரவு அளித்து வருகின்றனர். லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகள் கடந்த ஆண்டு அக்டோபர் 8ம் தேதி முதல் இஸ்ரேல் மீது தொடர்ந்து ராக்கெட் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

மேலும், லெபனானுக்குள் புகுந்து இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். லெபனான் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகள் உள்பட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், லெபனானின் வடக்கு பகுதியில் உள்ள திரிபொலி நகரின் பெட்டாவி பகுதியில் பாலஸ்தீனியர்கள் வசித்து வரும் அகதிகள் முகாம் உள்ளது. அந்த முகாமில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று அதிகாலை இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் ஹமாஸ் ஆயுதக்குழுவின் ராணுவ பிரிவான குவாசம் பிரிகேடிசின் முக்கிய தளபதி சயது அதுல்லா அலி கொல்லப்பட்டார். சயது வசித்து வந்த வீட்டின் மீது இஸ்ரேல் விமானப்படை துல்லிய தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஹமாஸ் ஆயுதக்குழுவின் தளபதி சயது அதுல்லா அலி அவரது மனைவி ஷியாமா அசீம், இரு மகள்கள் சைனப், பாத்திமா என குடும்பத்தினர் 4 பேரும் உயிரிழந்தனர்.

# ஹைதி நாட்டில் கலவரம் - 70 பேர் பலி

**போர்ட்-அயு-பிரின்ஸ், அக். 06-**

ஹைதி நாட்டில் கலவரத்தில் 70 பேர் வரையில் பலியானதாக ஐ.நா.வின் மனித உரிமைகளின் அறிக்கை தெரிவித்துள்ளது.

கரீபிய தீவு நாடான ஹைதியின் பான்ட்-சோண்டேவில் வியாழக்கிழமையில் (அக். 3) நடந்த கலவரத்தில் 70 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இந்த கலவரத்துக்கான சரியான காரணம் இன்னும் வெளிவரவில்லை. இருப்பினும், இது போன்ற கலவரங்கள் ஹைதி நாட்டில் சாதாரணமானவைதான் என்று கூறப்படுகிறது. இருந்தபோதிலும், தற்போது நடந்த பான்ட்-சோண்டேவில் பகுதிகளில் கலவரம் அசாதாரணமானது என்றும் கூறுகின்றனர்.

இந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள், புதிதாய்ப் பிறந்த குழந்தை உள்பட பலியாகியுள்ளனர். கலவரத்தை ஏற்படுத்திய கும்பல், வன்முறையின் போது 45 வீடுகளுக்கும் 34 கார்களுக்கும் தீ வைத்ததாகவும் கூறப்படுகிறது. இந்த படுகொலையின் பின்னணியில் உள்ள நோக்கம், இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. தாக்குதல் நடந்த பகுதிகள் முழுவதும், அந்த கும்பலின் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் காவல் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து, தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியைச் சுற்றிலும் காவல் படையை ஹைதி அரசு நிறுத்தியது. பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் இருந்ததால், மருத்துவமனைகளுக்கு தேவையான மருந்துகளையும் அரசு அனுப்பியது. அது மட்டுமின்றி, இந்த தாக்குதல் ஒட்டுமொத்த ஹைதி நாட்டின் மீதான தாக்குதல் என்று கண்டனம் தெரிவித்தது.

# சட்டக் கல்லூரிகளில் காலிப்பணியிடங்களை உடனே நிரப்ப ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

**சென்னை, அக். 06-**

தமிழகத்தில் சட்டக் கல்லூரிகளில் காலிப்பணியிடங்களை அரசு உடனே நிரப்ப வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது,

தமிழகத்தில் உள்ள சட்டக் கல்லூரிகளில் பேராசிரியர், உதவிப் பேராசிரியர் காலிப் பணியிடங்கள் தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்றம் முன்பு விசாரணைக்கு வந்த போது, சட்டக் கல்வி இயக்குனர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில்,

தமிழகத்தில் உள்ள 15 சட்டக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட 20 இணைப் பேராசிரியர் பணியிடங்களில் 19 பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும், 206 உதவிப் பேராசிரியர் பணியிடங்களில் 70 பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு அதிகமான காலிப் பணியிடங்களை நிரப்பாதது தி.மு.க. அரசின் அக்கறையின்மையை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

ஆகவே முதல்வர் இதில் உடனடியாகத் தலையிட்டு, சட்டக் கல்லூரிகள் உட்பட அனைத்துக் கல்லூரிகளிலும் காலியாக உள்ள இணைப் பேராசிரியர், உதவிப் பேராசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# மின்நுகர்வோர் சேவை மையத்தில் அமைச்சர் செந்தில் பாலாஜி ஆய்வு

**சென்னை, அக். 06-**

சென்னையில் தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கி வரும் மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் அமைச்சர் செந்தில் பாலாஜி நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில்,

மின்னகத்தில் பதிவான மின்சாரம் தொடர்பான பொது மக்களின் புகார்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் செந்தில் பாலாஜி ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யுமாறும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

மேலும் தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் செந்தில்பாலாஜி அறிவுறுத்தினார்.

மாநிலத்தின் மின்சாரத் தேவை மற்றும் மின் விநியோகத்தில் எவ்வித இடைவெளியும் இல்லை. மாநிலம் முழுவதும் தடையில்லா, சீரான மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் எடுத்து உள்ளது.

மின் விநியோகம் சார்ந்த குறைபாடுகளை சரி செய்ய 24 மணி நேரமும் செயல்படும் தொலைபேசி சேவை மின்னகத்தை 94987 94987-ல் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போஸ்னியாவில் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக 16 பேர் பலி

**போஸ்னியா, அக். 06-**

போஸ்னியாவில் கனமழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக 16 பேர் பலியாகினர்.

தென்கிழக்கு ஐரோப்பாவில் உள்ள பால்கன் தீபகற்பத்தில் உள்ள போஸ்னியா நாட்டில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இந்த மழையால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

நிலச்சரிவு காரணமாக நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன மற்றும் சில இடங்களில் வீடுகள் கிட்டத்தட்ட நீரில் மூழ்கியுள்ளன. வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பலர் காணவில்லை என அறிவிக்கப்பட்டு அந்நாட்டில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் மாயமாகி உள்ளவர்களை தேடும் பணியில் மீட்பு படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2014-ம் ஆண்டுக்கு பிறகு போஸ்னியாவின் மிக மோசமான வெள்ளம் இதுவாகும்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# 5.24 மில்லியன் டாலர் அபராத தொகையை தவறான வங்கிக் கணக்கிற்கு அனுப்பிய டுவிட்டர் நிறுவனம்

**பிரேசிலியா, அக். 06-**

கோர்ட் உத்தரவுப்படி, 5.24 மில்லியன் டாலர் அபராத தொகையை செலுத்திய டுவிட்டர் நிறுவனம், அதனை தவறான வங்கிக் கணக்கிற்கு அனுப்பிய விவரம் வெளியாகி உள்ளது.

பிரேசில் நாட்டு தேர்தல் சமயத்தில் எலான் மஸ்க்கின் சமூக வலைதளமான டுவிட்டர் தளத்தில் முடக்கப்பட்டிருந்த பல்வேறு கணக்குகள் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்து விட்டதாக அந்த நாட்டு சுப்ரீம் கோர்ட் நீதிபதி அலெக்சாண்டிரே டிமொரேஸ் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதுமட்டுமில்லாமல், டுவிட்டர் தளம் மீது விதிக்கப்பட்ட புதிய தணிக்கை உத்தரவுகளால் அங்குள்ள டுவிட்டர் அலுவலகத்தை மூடி விட்டு, அதில் பணியாற்றிய ஊழியர்களை எலான் மஸ்க் அதிரடியாக நீக்கினார். இருப்பினும், டுவிட்டர் தள சேவைகள் தொடர்ந்து வழங்கப்படும் என அறிவித்திருந்தார்.

இதனிடையே, கட்டுப்பாடின்றி டுவிட்டர் தளத்தில் இருந்து தகவல்கள் வெளியாகி வருவது குறித்த வழக்கு விசாரணையின் போது, டுவிட்டர் தளத்திற்கான சட்ட விவகார பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என்றும், தவறினால் பிரேசிலில் டுவிட்டர் தளம் முடக்கப்படும் என்று சுப்ரீம் கோரிட் நீதிபதி டிரொரேஸ் எச்சரித்தார்.

ஆனால், நீதிபதியின் இந்த எச்சரிக்கையை எலான் மஸ்க் ஏற்க மறுத்து விட்டார். இதையடுத்து, பிரேசிலில் டுவிட்டர் தளத்தில் தடை விதிக்கப்பட்டது. மேலும், தடையை நீக்க வேண்டுமானால், 5.2 மில்லியன் அமெரிக்க டாலர் அபராதத் தொகையை செலுத்த வேண்டும் என்று டுவிட்டர் தளத்திற்கு நீதிபதி உத்தரவிட்டார்.

அதன்பேரில், அபராதத் தொகையை செலுத்திய எலான் மஸ்க், அதனை தவறான வங்கிக் கணக்குக்கு அனுப்பியுள்ளார். இதனால், பிரேசிலில் டுவிட்டர் தளத்திற்காக தடையை நீக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பின்னர், தவறான கணக்கிக்கு பணத்தை செலுத்தியதாக சுட்டிக்காட்டிய சுப்ரீம் கோர்ட், மீண்டும் பணத்தை டுவிட்டர் தளத்தின் கணக்கிற்கு செலுத்த உத்தரவிட்டது.

# தொழில்நுட்பக் கோளாறால் விமான சேவைகள் பாதிப்பு

## இண்டிகோ நிறுவனம் விளக்கம்

**புதுடெல்லி, அக். 06-**

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விமான சேவையில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும் நிலையில், தங்களது விமான நிலைய குழுக்கள் தொடர்ந்து பணியாற்றி வருவதாக இண்டிகோ விளக்கம் அளித்துள்ளது.

இண்டிகோ நிறுவனம் இது குறித்து அளித்திருக்கும் விளக்கத்தில், தற்போது எங்கள் நெட்வொர்க் முழுவதும் தற்காலிக தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால் எங்கள் இணையதளம் மற்றும் விமான டிக்கெட் முன்பதிவு முறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இண்டிகோ விமானப் பயணிகள் விமான நிலையங்களில் வருகைப் பிரிவில் நீண்ட வரிசைகளில் அதிக நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதைய கணினி செயலிழப்பால் பாதிக்கப்பட்டிருக்கும் விமானப் பயணிகளுக்கு சிறந்த உதவி மற்றும் ஆதரவை வழங்க எங்கள் விமான நிலைய ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் இடைவிடாமல் உழைத்து வருகிறார்கள் என்பதை நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறோம் என்று இண்டிகோ நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விமான நிலையத்தில், வருகைப் பிரிவில் காத்திருப்பு நேரத்தைக் குறைப்பதற்கும், அனைவருக்கும் நல்ல பயண அனுபவத்தை உறுதி செய்வதற்கும் எங்கள் விமான நிலைய ஊழியர்கள் உறுதுணையாக இருப்பர். இந்த நேரத்தில் உங்கள் பொறுமை மற்றும் நிலைமையை புரிந்துகொள்ளும் தன்மை போன்றவற்றை நாங்கள் உண்மையில் பாராட்டுகிறோம். எங்களுடன் இருப்பதற்கு நன்றி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இண்டிகோ விமான நிறுவனத்தின் கணினிகளில் ஏற்பட்டிருக்கும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, விமான நிலையத்தில் நீண்ட வரிசையில் பயணிகள் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது. விமான நிலையத்தில் பயணிகளின் உடைமைகளை சரிபார்ப்பது மற்றும் விவரங்களை உறுதி செய்வதில் தாமதம் ஏற்பட்டிருப்பதால், பயணிகள் நீண்ட தொலைவில் வரிசையில் நின்றிருக்கும் காட்சிகள் வெளியாகின.

இண்டிகோ விமான நிறுவனத்தில் ஏற்பட்டிருக்கும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, இந்த பிரச்னை ஏற்பட்டிருப்பதாகவும், எங்களது இணையதளத்தில் முன்பதிவு செய்வது உள்ளிட்டவையும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், விமான நிலையத்தில் வருகை தரும் இண்டிகோ பயணிகள் கடும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். நீண்ட வரிசையில் அதிக நேரம் காத்திருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# லெபனானில் இருந்து 97 குடிமக்களை விமானம் மூலம் மீட்ட தென் கொரியா

**சியோல், அக். 06-**

லெபனானில் பதற்றம் நிலவி வரும் சூழலில் தனது குடிமக்கள் 97 பேரை விமானம் மூலம் மீட்டதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா நகர் மீது இஸ்ரேல் போர் தொடங்கி நாளையுடன் (திங்கட்கிழமை) ஓர் ஆண்டாகிறது. ஈரானின் ஆதரவை பெற்ற ஹமாஸ் அமைப்புக்கு எதிரான இந்த போரில் காசாவில் சுமார் 42 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

இதனிடையே மத்திய கிழக்கின் பல்வேறு நாடுகளில் உள்ள ஈரான் ஆதரவை பெற்ற ஆயுத குழுக்கள் ஹமாசுக்கு ஆதரவாக இஸ்ரேலை குறிவைத்து வான்வழியாக தாக்குதல்களை நடத்தி வருகின்றன. அவர்களுக்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.

அந்த வகையில் லெபனானை சேர்ந்த இஸ்புல்லா அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் கடந்த மாதம் 23-ம் தேதி லெபனான் மீது மிகப் பெரிய அளவிலான வான்வழி தாக்குதலை தொடங்கியது. தலைநகர் பெய்ரூட்டில் நடத்தப்பட்ட வான்தாக்குதலில் இஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா, ஈரானின் மூத்த ராணுவ தளபதி அப்பாஸ் உள்ளிட்டோர் கொல்லப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாக இஸ்ரேலிய படைகள் லெபனானுக்குள் ஊடுருவி தரைவழி தாக்குதலையும் தொடங்கியது. இந்நிலையில் லெபனானில் பதற்றம் நிலவி வரும் சூழலில் 97 பேரை விமானம் மூலம் மீட்டதாக தென் கொரியா தெரிவித்துள்ளது. விமானத்தில் இருந்த குழுவில் தென் கொரியா நாட்டை சேர்ந்த பிரஜைகளும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் உள்ளடங்குவதாக தென் கொரியா வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் லெபனானில் பணிபுரிந்த தூதர்கள் மற்றும் தூதரக பணியாளர்கள் தவிர சுமார் 30 தென் கொரியர்கள் இருந்ததாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தென் கொரிய அதிபர் யூன் சுக் யோல், மத்திய கிழக்கில் உள்ள மோதல் பகுதிகளுக்கு ராணுவ விமானங்களை அனுப்புமாறு அதிகாரிகளுக்கு கடந்த புதன்கிழமை அறிவுறுத்தினார், அவர் பிராந்தியத்தில் தீவிரமான சண்டையின் தாக்கம் குறித்து விவாதிக்க ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார். சுமார் 480 தென் கொரிய பிரஜைகள் இஸ்ரேலிலும், 110 பேர் ஈரானிலும் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தங்கம் விலையில் மாற்றமில்லை

**சென்னை, அக். 06-**

தங்கம் விலை நேற்று எந்த மாற்றமும் இன்றி விற்பனையானது.

கடந்த மாதம் இறுதியில் இருந்து மீண்டும் தங்கம் விலை உயர ஆரம்பித்து இருக்கிறது. அதிலும் கடந்த சில நாட்களாக தாறுமாறாக தங்கம் விலை உயர்ந்துள்ளது. தொடர்ந்து தங்கத்தின் விலை அதிகரித்து வந்த நிலையில், நேற்று முன்தினம் சவரனுக்கு ரூ.80 உயர்ந்து புதிய உச்சத்தை தொட்டு ரூ.56,960-க்கு விற்பனையானது.

இந்த நிலையில் நேற்று தங்கம் விலையில் மாற்றமின்றி அதே விலையில் விற்பனையானது. அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு சவரன் ரூ.56,960-க்கு விற்பனையானது. ஆபரணத் தங்கம் ஒரு கிராம் ரூ.7,120-க்கு விற்பனையானது. வெள்ளி விலையும் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.103-க்கு விற்பனையானது.

**06-10-2024**




**மேஷம்:-** செல்லும் இடங்களில் எல்லாம் சிறப்புப் பெறுவீர்கள். அரசு வழியில் அதிகாரிகளின் உதவியால் ஆதாயம் ஏற்படும். புதுப்புது ஆடைகளும் மனைவியால் நன்மையும் உண்டு.

**ரிஷபம்:-** வியாபாரத்தில் போட்டிகள் குறைவதால் இலாபம் அதிகரிக்கும். பல வழிகளிலும் தனவரவு உண்டு. சிலர் வீடு வாங்கும் எண்ணத்தில் கடனுக்கு முயற்சி செய்வர்.

**மிதுனம்:-** குழந்தைகள் நலனில் அக்கறை அவசியம். இரவுப் பயணங்களில் கவனம் தேவை. அமைதியும், ஆதரவான பேச்சும் எதிர்ப்புக்களைக் குறைக்கும். விழிப்போடு செயல்பட்டால் வியாபாரம் பெருகும்.

**கடகம்:-** எந்தப் பிரச்சனையையும் துணிந்து எதிர் கொள்ளும் மனோதிடம் ஏற்படும். தேவையற்ற அலைச்சல்களால் தேகசுகம் குறையும். வியாபாரத்தில் எதிர்பார்த்த வரவுகள் இருக்காது.

**சிம்மம்:-** குடும்பத்தாருடன் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். தொல்லை தந்த நபர்கள் தூர விலகுவர். அரசு ஆதரவும், அனைத்துக் காரியங்களிலும் வெற்றியும் கிடைக்கும்.

**கன்னி:-** எவருக்கும் ஜாமீன், மறந்தும் கொடுத்துவிடாதீர்கள். உண்மை நண்பர்களும் உதவத் தயங்குவர். மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது.

**துலாம்:-** பொருளாதார நிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும். வாக்குவன்மையும், புத்திசாலித்தனமும் இணையவரவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் தொல்லைகள் நீங்கி, எல்லைகள் விரிந்து ஏற்றம் வரும்.

**விருச்சிகம்:-** வாழ்க்கையில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம். நேர்மையான வழிகளில் பணம் சம்பாதிக்க முயலுங்கள். கோபத்தைக் குறைத்தால் ஆரோக்கியம் சீர்படும்.

**தனுசு:-** பிரிந்திருந்த கணவன், மனைவி இணைந்து மகிழ்வர். கல்வியில் மாணவர்களுக்கு நல்ல தேர்ச்சி ஏற்படும். வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு தனலாபம் உண்டு.

**மகரம்:-** பொருளாதார நிலை போற்றும்படியாய் இருக்கும். வசீகரமான பேச்சால் வருமானம் கூடும். வருமான உயர்வால் வளமும் அதிகரிக்கும். விரும்பிய வாகனத்தில் வெளியூர் செல்வீர்கள்.

**கும்பம்:-** புத்திர பாக்கியம் ஏற்படும். வியாபாரம், தொழிலில் எதிர்பார்ப்புக்கு மேல் ஏற்றம் வரும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவதால் புகழ் ஓங்கும். பொதுவாழ்வில் உரிய அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்:-** மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய நாள். பிறர் துன்பத்தில் மகிழ்ச்சி காணும் எண்ணத்தைக் கைவிடுவது நல்லது. உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வு உண்டு.

# டிசம்பரில் ஹைட்ரஜன் ரயில் சோதனை ஓட்டம்

**புது டெல்லி, அக். 06-**

சுற்றுச்சூழலை பாதிக்காத சுத்தமான ஹைட்ரஜன் எரிபொருள் செல் தொழில்நுட்பத்தில் தயாராகவுள்ள ஹைட்ரஜன் ரயில் சோதனை ஓட்டம் டிசம்பரில் நடைபெற உள்ளது. இந்த ரயில் திட்டத்தை ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் நேரில் கவனித்து வருவதாக ரயில்வே வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய ரயில்வேத் துறையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கையாக, சுற்றுப்புறச் சூழலை மாசுப்படுத்தாத ஹைட்ரஜன் எரிபொருள் செல் தொழில்நுட்பத்தில் இயங்கும் ரயில்களை இயக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இதையடுத்து ஜெர்மனி, பிரான்ஸ், சுவிடன் மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக, ஹைட்ரஜன் எரிபொருள் செல் தொழில்நுட்பத்தில் இயங்கும் ரயில்களை இயக்கும் ஐந்தாவது நாடாக இந்தியா மாறுகிறது. தற்போதுள்ள டீசல் எலக்ட்ரிக் மல்டிபிள் யூனிட் ரயில்களில் ஹைட்ரஜன் எரிபொருள் கலத்தை மீண்டும் பொருத்துவதற்கான ஒரு முன்னோடித் திட்டமாக இதனைக் கொண்டு வந்துள்ளது.

ஹைட்ரஜன் எரிபொருள் கொண்டு இயங்கும் இந்த ரயிலை வடக்கு ரயில்வே மண்டலத்தின் கீழ் அரியானாவில் உள்ள ஜிந்த் - சோனிபட் வழித்தடத்தில் வரும் டிசம்பரில் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த இந்த ரயில்கள் ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் மேற்பார்வையில் சென்னை ஐ.சி.எப் ரயில் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு வருவதாக மூத்த ரயில்வே அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தி உள்ளார்.

சோதனைகளுக்குப் பிறகு, இந்த ஹைட்ரஜன் ரயில் திட்டத்தின் கீழ் இந்திய ரயில்வே 35 ஹைட்ரஜன் ரயில்களை தயாரிக்க உள்ளது. ஒவ்வொரு ரயிலும் ரூ. 80 கோடி செலவில் தயாரிக்கப்படுகிறது. மேலும் பல்வேறு பாரம்பரிய மற்றும் மலைப் பாதைகளில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூ.70 கோடி முதலீடு செய்யப்படுகிறது. இந்த ரயில்கள் முதல்கட்டமாக பாரம்பரிய வழித்தடங்கள் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் ரயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டம் வெற்றி பெறும் பட்சத்தில், இந்தியா பசுமை எரிபொருளை நோக்கி வேகமாக நகர்ந்து செல்வது உறுதியாகிவிடும். இது, எரிபொருளுக்காக பிற நாடுகளை சார்ந்திருக்கும் சூழலை மாற்றி, நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் செல்லும்.

### சமத்துவ நெறியைப்போற்றுவோம்:
# வள்ளலார் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, அக். 06-**

ஏற்றத்தாழ்வு காணாத சமத்துவ நெறியைப் போற்றுவோம் என்று வள்ளலார் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அருட்பிரகாச வள்ளலாரின் 202-வது பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்டது. இந்த நிலையில் அருட்பிரகாச வள்ளலாரின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது, நமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற ஆண்டு முதலாக, தனிப்பெருங்கருணை நாள் எனக் கொண்டாடி வரும் அருட்பிரகாச வள்ளலாரின் பிறந்தநாள். உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்.

மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும் என அவர் காட்டிய சமரச சுத்த வழியை எந்நாளும் பின்பற்றுவோம். உயிர்களிடத்து வேற்றுமையும், ஏற்றத்தாழ்வும் காணாத சமத்துவ நெறியைப் போற்றுவோம். வாழ்க வள்ளலார். இவ்வாறு அந்த பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

### கர்நாடகாவில் மைசூரு உள்ளிட்ட
# 11 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை

**பெங்களூர், அக். 06-**

கர்நாடகாவில் மைசூரு, குடகு உள்ளிட்ட 11 மாவட்டங்களுக்கு மஞ்சள் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா மாநிலத்தில் கடந்த சில நாட்களாக மழை தீவிரம் அடைந்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை மைசூருவில் சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை கொட்டியது. இதன் காரணமாக குளிர்ந்த காற்று வீசியது.

மேலும் நேற்று முதல் 4 நாட்களுக்கு மைசூரு, குடகு, சாம்ராஜ்நகர், மாண்டியா, ஹாசன, துமகூர, பெங்களூரு மாநகரம், பெங்களூரு புறநகர், ராம்நகர், சிக்கபள்ளாபூர், கோலார் உள்ளிட்ட இடங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மேலும் தாவணகெரே, சித்ரதுர்கா, குடகு, மைசூரு, சாம்ராஜ்நகர் உள்பட 11 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவை ஒரு குடும்பம் மட்டுமே ஆள வேண்டும் என்று நினைக்கின்றனர்
### காங்கிரஸ் மீது பிரதமர் மோடி குற்றச்சாட்டு

**வாஷிம், அக். 06-**

இந்தியாவை ஒரு குடும்பம் மட்டுமே ஆள வேண்டும் என்று நினைக்கிறார்கள் என்று பிரதமர் மோடி காங்கிரஸ் கட்சியை விமர்சித்துள்ளார்.

மகாராஷ்டிராவின் வாஷிம் நகரில் நடைபெற்ற விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைக்கான திட்டங்களைத் தொடங்கி வைத்து பிரதமர் மோடி பேசியதாவது:

இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தை வளப்படுத்துவதில் பஞ்சாரா சமூகம் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. கலை, பாரம்பரியம், ஆன்மிகம், வர்த்தகம் என அனைத்து துறைகளிலும் பஞ்சாரா சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மகத்தான பங்களிப்பைச் செய்துள்ளனர். நவராத்திரியின் புனிதமான நேரத்தில், விவசாயிகளுக்கான பிரதமரின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் 18-வது தவணையாக நாட்டின் 9.5 கோடி விவசாயிகளின் கணக்குகளுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் பணம் மாற்றப்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவின் இரட்டை என்ஜின் அரசு, மாநில விவசாயிகளுக்கு இரட்டிப்பு நன்மைகளை வழங்குகிறது. நமோ ஷேத்காரி மகாசம்மான் நிதி திட்டத்தின் கீழ், மகாராஷ்டிராவின் 90 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு சுமார் 1900 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

காங்கிரஸின் சிந்தனை ஆரம்பத்திலிருந்தே அந்நியமானது. ஆங்கிலேயர் ஆட்சியைப் போலவே, காங்கிரஸ் குடும்பமும் தலித், பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியினரை தங்களுக்குச் சமமாக கருதுவதில்லை. இந்தியாவை ஒரு குடும்பம் மட்டுமே ஆள வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

நகர்ப்புற நக்சலைட்டுகளால் காங்கிரஸ் இயக்கப்படுகிறது. நாம் அனைவரும் ஒன்றிணைந்தால், நாட்டைப் பிரிக்கும் அவர்களின் திட்டம் தோல்வியடையும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்தியாவுக்கு நல்ல எண்ணம் இல்லாதவர்களுடன் காங்கிரஸ் எவ்வளவு நெருக்கமாக நிற்கிறது என்பதை அனைவரும் பார்க்கலாம்.

சமீபத்தில், டெல்லியில் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. காங்கிரஸ் தலைவர் ஒருவர்தான், அதன் பின்னணியில் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இளைஞர்களை போதைப்பொருளின் பக்கம் தள்ளுவதன் மூலம் கிடைக்கும் பணத்தில் இருந்து தேர்தலில் போட்டியிட காங்கிரஸ் விரும்புகிறது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# அனைவரும் ஒன்று என்பதுதான் சனாதனம்: கவர்னர் ஆர்.என். ரவி

**சென்னை, அக். 06-**

சனாதன தர்மத்தில் வேறுபாடு இல்லை. பெரியவர், சிறியவர் இல்லை. அனைவரும் ஒன்று என்பது தான் சனாதனம் என்று கவர்னர் ஆர்.என். ரவி தெரிவித்தார்.

சென்னையில், வள்ளலார் சிலைக்கு கவர்னர் ஆர்.என்.ரவி மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதை தொடர்ந்து வள்ளலார் பெருவிழா நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

அனைவரும் ஒன்று என்பது தான் சனாதன தர்மம். சனாதன தர்மத்தில் வேறுபாடு இல்லை. பெரியவர், சிறியவர் இல்லை. சனாதன தர்மத்தில் வேறுபாடு காட்டி சிலர் குளிர் காய விரும்புகிறார்கள். இதற்கு அவசியம் இல்லை. சிலர் சனாதனத்தை ஜாதியோடு தொடர்புபடுத்தி பேசி, தவறான புரிதலை ஏற்படுத்துகிறார்கள்.

இந்த நிகழ்வு மிகவும் புனிதமான ஒன்று. ஒரு சங்கடமான சூழலில் நாடு கஷ்டப்பட்ட போது வள்ளலார் அவதரித்தார். எந்த உயிருக்கும் இடையூறு வந்தாலும் அதனை காக்க வேண்டும் என்பது தான் நமக்கு கற்பித்த பாடம். மனிதன், விலங்கு என அனைவரும் ஒன்றிணைவது தான் சனாதனம். ஜாதி பார்ப்பவர்கள் சனாதனவாதியாக இருக்க முடியாது. சனாதன தர்மம் எந்த ஏற்றத்தாழ்வையும் கூறவில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

### ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு:
# வரும் 15-ம் தேதி பாகிஸ்தான் செல்கிறார் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர்

**புது டெல்லி, அக். 06-**

வரும் 15 மற்றும் 16-ம் தேதிகளில் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு இந்த ஆண்டு பாகிஸ்தானில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு, பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் ஒரு நாட்டின் அதிபர் அல்லது பிரதமர்கள் பங்கேற்பார்கள்.

ஆனால், இந்தியா சார்பில் வெளியுறவு அல்லது பாதுகாப்புத் துறை அமைச்சரே கடந்த காலங்களில் பங்கேற்றனர். கடந்த ஆண்டு இந்தியாவில் நடந்த மாநாட்டில் பாகிஸ்தான் வெளியுறவு துறை அமைச்சர் பங்கேற்று இருந்தார்.

இந்நிலையில், இந்த ஆண்டு நடக்கும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளார். வரும் 15 மற்றும் 16-ம் தேதிகளில் அவர் பாகிஸ்தானில் தங்கியிருக்க உள்ளார் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தி உள்ளது.

காஷ்மீர் விவகாரம், பயங்கரவாதம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் உள்ள நிலையில் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் பாகிஸ்தான் பயணம் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

# சத்ரபதி சிவாஜியின் சிந்தனைக்கு எதிராக வேலை செய்கிறார்கள்
### பா.ஜ.க.வினர் மீது ராகுல் விமர்சனம்

**கோலாப்பூர், அக். 06-**

சத்ரபதி சிவாஜியின் சிலையை பா.ஜ.க.வினர் கைகளைக் கூப்பி வணங்குகிறார்கள், ஆனால் 24 மணி நேரமும் அவருடைய சிந்தனைக்கு எதிராகவே அவர்கள் வேலை செய்கிறார்கள் என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

மகராஷ்டிராவின் கோலாப்பூருக்குச் சென்ற காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, அங்கு சத்ரபதி சிவாஜியின் சிலையை திறந்து வைத்தார். பின்னர் அவர் பேசியதாவது,

சத்ரபதி சிவாஜி தன் வாழ்நாள் முழுவதும் எதற்காகப் போராடினாரோ, அந்த விஷயங்களுக்காக நாமும் போராட வேண்டும். நாடு அனைவருக்கும் சொந்தமானது, அனைவரையும் அழைத்துச் செல்ல வேண்டும், யாருக்கும் அநீதி இழைக்கப்படக் கூடாது என்ற செய்தியை சத்ரபதி சிவாஜி வழங்கினார்.

சிவாஜி மகாராஜின் இந்த சிந்தனையின் அடிப்படையில் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. அவர் தனது வாழ்நாள் முழுவதும் போராடிய அனைத்தையும் அரசியல்சாசனம் உள்ளடக்கியுள்ளது. இன்று இந்தியாவில் இரண்டு சித்தாந்தங்களுக்கு இடையே சண்டை நடந்து கொண்டிருக்கிறது.

ஒரு சித்தாந்தம், அரசியலமைப்பைப் பாதுகாக்கவும், சமத்துவம் மற்றும் ஒற்றுமையை வலியுறுத்தவும் பாடுபடுகிறது. இது சத்ரபதி சிவாஜியின் சித்தாந்தம். இரண்டாவது சித்தாந்தம், அரசியலமைப்பை அழிப்பதில் ஈடுபட்டுள்ளது. மக்களை மிரட்டுகிறது.

அரசியலமைப்பைக் காப்பாற்றுவதற்கான போராட்டம் புதியதல்ல. சிவாஜி மகாராஜ் எந்த சித்தாந்தத்துடன் போராடினாரோ, அதே சித்தாந்தத்துடன் காங்கிரஸ் கட்சியும் போராடி வருகிறது. பா.ஜ.க. அமைத்த சத்ரபதி சிவாஜியின் சிலை, சில நாட்களிலேயே உடைந்தது. சிவாஜிக்கு சிலை வைத்தால் போதாது, அவரது சித்தாந்தமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் அதில் உள்ள செய்தி.

பா.ஜ.க.வினர் சத்ரபதி சிவாஜி சிலை முன் கைகளைக் கூப்பி வணங்குகிறார்கள். ஆனால் 24 மணி நேரமும் அவருடைய சிந்தனைக்கு எதிராக வேலை செய்கிறார்கள். சத்ரபதி சிவாஜியை நம்புகிறேன் என பா.ஜ.க.வினர் கூறும் போது, காங்கிரஸ் கட்சியினர் ஒரு கேள்வி கேட்க வேண்டும்.

நீங்கள் சத்ரபதி சிவாஜி சிலைக்கு முன்னால் உங்கள் கைகளை குவித்து வணங்குகிறீர்கள். ஆனால் நீங்கள் அரசியலமைப்பை பாதுகாக்கிறீர்களா? என்பதுதான் அந்த கேள்வி. ஏனென்றால், அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கவில்லை என்றால், சிலையின் முன் கைகளைக் குவிப்பதால் எந்தப் பயனும் இல்லை. சத்ரபதி சிவாஜியின் சித்தாந்தத்தையும், அரசியல் சாசனத்தையும் பாதுகாப்பதே உங்களின் வேலை என்று காங்கிரஸ் தொண்டர்களுக்கு ஒரே ஒரு செய்தியை கூறுகிறேன். சத்ரபதி சிவாஜி தனது வாழ்நாள் முழுவதும் அநீதிக்கு எதிராக, நீதிக்கான போரை நடத்தினார். சத்தியத்தின் பாதையைப் பின்பற்றக் கற்றுக் கொடுத்தார். அவரது வழியைப் பின்பற்றி, மக்களின் நீதிக்கான உரிமைக்காக நாங்கள் தொடர்ந்து போராடுவோம். இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.

### திருமலையில் வளர்ந்து வரும்
# வி.ஐ.பி. கலாச்சாரம் கவலை அளிக்கிறது: சந்திரபாபு நாயுடு

**திருப்பதி, அக். 06-**

திருமலையில் வளர்ந்து வரும் வி.ஐ.பி. கலாச்சாரம் தீவிர கவலைகளை அளிக்கிறது என்று ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

திருப்பதி திருமலையில் உள்ள பத்மாவதி விருந்தினர் மாளிகையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. முதல்வர் சந்திரபாபு நாயுடு தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அறநிலையத் துறை அமைச்சர் அனம் ராம் நாராயண ரெட்டி, திருமலை திருப்பதி தேவஸ்தான செயல் அதிகாரி ஜே. ஷியாமளா ராவ், கூடுதல் செயல் அலுவலர் வீரய்யா சவுத்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசியதாவது,

மலைக்கோயிலின் புனிதத்தை நிலைநிறுத்த வேண்டியது மிகவும் அவசியம். கோயில் அமைந்துள்ள மலை உச்சியில் ‘கோவிந்த நாமங்கள்’ கோஷம் மட்டுமே ஒலிக்க வேண்டும். ஆன்மிகச் சூழலை எந்தவித சமரசமுமின்றி பாதுகாக்க வேண்டும்.

பக்தர்களின் அதிகரித்து வரும் தேவைகளை பூர்த்தி செய்ய போதிய நீர் இருப்பை உறுதி செய்ய மேம்பட்ட திட்டமிடல் தேவை. திருமலை வனப்பகுதியில் தற்போது 72 சதவீத காடுகள் உள்ளன. பரந்த வனப் பாதுகாப்பு மற்றும் விரிவாக்க முயற்சிகளுடன் அடுத்த ஐந்தாண்டுகளில் குறைந்தது 80 சதவீதமாக உயர்த்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் பாதுகாப்புக்கான முயற்சிகள் குறித்த அறிக்கைகளை அதிகாரிகள் வழங்க வேண்டும்.

பக்தர்களுக்கான சேவைகளை மேம்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பக்தர்கள் தங்கள் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். திருமலா திருப்பதி தேவஸ்தானத்தின் கீழ் உள்ள அனைத்து கோயில்களிலும் படிப்படியாக இதுபோன்ற முறையை அதிகாரிகள் செயல்படுத்த வேண்டும். லட்டுகள் உள்ளிட்ட கோயில் பிரசாதங்களின் தரம் நிலையானதாகவும், மேம்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும். அவற்றைத் தயாரிக்க சிறந்த பொருட்களைப் பயன்படுத்த வேண்டும்.

திருமலையில் வளர்ந்து வரும் வி.ஐ.பி கலாச்சாரம் தீவிர கவலைகளை அளிக்கிறது. ஆடம்பரம் இல்லாத, அதிக செலவு இல்லாத எளிமையான, ஆன்மிக அனுபவம் வி.ஐ.பி.க்களுக்கு கிடைக்கச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். அனைத்து பக்தர்களையும் மரியாதையுடன் நடத்த வேண்டும்.

எந்தவிதமான முரட்டுத்தனமான நடத்தையும் பக்தர்கள் மீது பிரயோகிக்கக் கூடாது. பக்தர்கள் திருப்தியுடனும் ஆன்மிக நிறைவுடனும் வீடு திரும்ப வேண்டும். திருமலா திருப்பதி தேவஸ்தான ஊழியர்கள் இதனை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த பயணத்தின்போது, திருமலையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தால் நிறுவப்பட்ட மையப்படுத்தப்பட்ட சமையலறையை சந்திரபாபு நாயுடு திறந்து வைத்தார்.

### அரியானா சட்டசபை தேர்தல்:
# குதிரையில் வந்து வாக்களித்த பா.ஜ.க. எம்.பி நவீன் ஜிண்டால்

**சண்டிகர், அக். 06-**

அரியானாவில் பா.ஜ.க. எம்.பி., நவீன் ஜிண்டால் வாக்குப் பதிவு மையத்துக்கு வாக்களிக்க குதிரையில் வந்து ஆச்சரியப் படுத்தி உள்ளார்.

அரியானா மாநிலத்தில் உள்ள 90 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நேற்று தேர்தல் நடைபெற்றது. காலை 7 மணி முதல் ஏராளமான ஆண்கள், பெண்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்.

இந்நிலையில், குருக்ஷேத்ரா தொகுதி பா.ஜ.க. எம்.பி., நவீன் ஜிண்டால் தமது தொகுதிக்குட்பட்ட வாக்குப் பதிவு மையம் ஒன்றில் ஓட்டுப்போட குதிரையில் வந்தார். தமது வாக்கை செலுத்திய பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

மக்களிடையே பெரும் ஆர்வமும், எழுச்சியும் இருக்கிறது. காலை முதலே அவர்கள் அனைவரும் வாக்களித்து வருவது மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. அரியானா மாநில மக்கள் நிச்சயம் பா.ஜ.க. வை அரியணையில் அமர்த்துவார்கள். மக்களின் ஆசீர்வாதம் பா.ஜ.க.வுக்கு உண்டு. நயப் சிங் சைனி அரியானா முதல்வராவார் என்ற நம்பிக்கை உள்ளது என்று அவர் கூறினார்.

நவீன் ஜிண்டாலின் தாயாரும், நாட்டின் நம்பர் ஒன் பணக்கார பெண்மணியுமான சாவித்ரி ஜிண்டால் ஹிசார் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிடுகிறார். இதே தொகுதியை சேர்ந்த அமைச்சரும், எம்.எல்.ஏ.,வுமான கமல் குப்தாவை எதிர்த்து களம் இறங்கி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சாம்சங் தொழிலாளர்களுக்கு ஆதரவாக
# சென்னையில் போராட்டம் நடத்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் கைது

**சென்னை, அக். 06-**

சென்னையில் சாம்சங் தொழிலாளர்களுக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களை போலீசார் கைது செய்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் உற்பத்தி ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் கடந்த 9-ந்தேதி முதல் ஆலைக்கு அருகே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதிக சம்பளம், பணிநேரம் குறைப்பு மற்றும் ஆலையில் சங்கத்திற்கான அங்கீகாரம் ஆகியவற்றை வலியுறுத்தி போராட்டம் நடந்து வருகிறது.

போராடும் தொழிலாளர்கள் பணிக்கு திரும்ப வேண்டும் என ஆலை நிர்வாகம் தெரிவித்தது. அவர்கள் வேலைக்கு வராவிட்டால் சம்பளம் பிடித்தம் மற்றும் பணி நீக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சாம்சங் நிறுவனம் தெரிவித்தது. இருப்பினும் தொழிலாளர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சாம்சங் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக சென்னையில் இடதுசாரி கட்சிகளின் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த நிலையில் அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டதாக கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களை போலீசார் கைது செய்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட தலைவர்களை போலீசார் கைது செய்தனர்.

# கார் விபத்தில் இருந்து உயிர் தப்பினார் முன்னாள் அமைச்சர் ஓ.எஸ்.மணியன்

**நாகை, அக். 06-**

முன்னாள் அமைச்சரும், வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினருமான ஓ.எஸ்.மணியன் சென்ற கார் நேற்று இ.சி.ஆர். சாலையில் உள்ள கோயில் மதில் சுவற்றில் மோதியது. இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக காயங்கள் ஏதுமின்றி உயிர் தப்பினார் ஓ.எஸ்.மணியன். நாகை மாவட்டம் தலைஞாயிறு அடுத்த ஓரடியம்புலம் பகுதியைச் சேர்ந்த ஓ.எஸ்.மணியன், நேற்று காலை கிழக்கு கடற்கரைச் சாலையில் தனது காரில் சென்று கொண்டிருந்தார். திருப்பூண்டி காரைநகர் அருகே அவரது கார் சென்ற போது எதிரில் இரு சக்கர வாகனத்தில் வந்தவர் அதை தாறுமாறாக ஓட்டி வந்ததாகத் தெரிகிறது. அப்படி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதாமல் இருக்க ஓ.எஸ்.மணியனின் கார் ஓட்டுநர் காரை வேகமாக திருபியுள்ளார். அப்போது கட்டுப்பாட்டை இழந்த கார் அருகே உள்ள பெரியாச்சி அம்மன் கோயில் மதில் சுவற்றின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் காரின் முன்பக்க பகுதி சேதமடைந்த நிலையில் ஓ.எஸ்.மணியனும் அவரது கார் ஓட்டுநரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். லேசான சிறு காயத்தோடு அவர்கள் நாகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் வீடு திரும்பினர். இந்த விபத்தில் இருசக்கர வாகனத்தில் வந்த குணசேகரன் மற்றும் அவரது மனைவிக்கு காயம் ஏற்பட்டு அவர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மைசூரில் இளைஞர் தசரா விழா இன்று தொடங்குகிறது
### பாதுகாப்பு பணியில் 1,239 போலீசார்

**மைசூரு, அக். 06-**

மைசூரில் இளைஞர் தசரா இன்று துவங்குகிறது. பாதுகாப்புக்காக 1,239 போலீசார் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் மைசூரு தசராவின்போது, இளைஞர் தசரா நடக்கும். இந்த தசரா இளைஞர்கள் திறமையை வெளிப்படுத்தும், ஒரு மேடையாக பார்க்கப்படுகிறது. ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்று, ஆண்டுதோறும் இளைஞர் தசரா களைகட்டும்.

ஒவ்வொரு ஆண்டும் மகாராஜா கல்லூரி மைதானத்தில் தான், இளைஞர் தசரா நடந்து வந்தது. ஆனால், அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதால், இந்த ஆண்டு இடம் மாற்றப்பட்டு உள்ளது. சாமுண்டி மலை பின்பக்கம் இருக்கும், உத்தனஹள்ளி மாரியம்மன் கோவில் அருகே உள்ள, மைதானத்தில் இளைஞர் தசரா கொண்டாடப்பட இருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகள் குறித்து, மைசூரு எஸ்.பி., விஷ்ணுவர்த்தன் நிருபர்களிடம் கூறுகையில், மைசூரு இளைஞர் தசரா விழா இன்று 6-ம் தேதி துவங்கி, வரும் 10-ம் தேதி வரை நடக்கிறது. சாமுண்டி மலை பின்பக்கம் வனப்பகுதி அருகே நிகழ்ச்சி நடப்பதால், தேவையின்றி யாரும் வனப்பகுதிக்குள் செல்ல கூடாது. நிகழ்ச்சி முடிந்து வீட்டிற்கு செல்வோருக்கு, எந்த தொந்தரவும் ஏற்படாமல் இருக்க, நிகழ்ச்சி நடக்கும் இடத்தில் இருந்து, மெயின் ரோடு வரை மின்விளக்கு அமைக்கப்பட்டு உள்ளது. பாதுகாப்பு பணிக்காக 1,239 போலீசார் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

நகர, சென்ட்ரல் பஸ் நிலையங்களில் இருந்து, இளைஞர் தசரா நடக்கும் இடத்திற்கு, பஸ் அடிக்கடி இயக்கப்படுகிறது. சக்தி திட்டத்தின் கீழ் பெண்கள் பயணம் செய்யலாம். தினமும் ஒரு லட்சம் பேர் கலந்து கொள்ள வாய்ப்பு உள்ளது.

பாஸ் வாங்கியவர்கள் அமர்ந்து பார்க்க 5,000 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. வனப்பகுதி என்பதால் இடத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள, மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# மோசடி வழக்கில் கைதானவருக்கு த.வெ.க. கட்சியுடன் தொடர்பா ? கரூர் மாவட்ட தலைவர் விளக்கம்

**கரூர், அக். 06-**

மோசடி வழக்கில் கைதானவருக்கும் தமிழக வெற்றிக் கழகத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று கரூர் மாவட்ட தலைவர் விளக்கமளித்துள்ளார்.

கரூர் மாவட்டம் குளித்தலையில் மோசடி வழக்கில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகி கைது செய்யப்பட்டதாக தகவல் வெளியான நிலையில், கைது செய்யப்பட்ட ராஜாவுக்கும் தமிழக வெற்றிக் கழகத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று கரூர் மாவட்ட தமிழக வெற்றிக் கழகத் தலைவர் மதியழகன் விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“கரூர் மாவட்டம், குளித்தலையில் மோசடி வழக்கில் ராஜா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகி என்று செய்திகள் வந்து கொண்டுள்ளன. கைது செய்யப்பட்ட ராஜாவிற்கும் தமிழக வெற்றிக் கழகத்துக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. அவருக்கு தமிழக வெற்றிக் கழகத்திலோ அல்லது தளபதி விஜய் மக்கள் இயக்கத்திலோ எந்தவிதமான பொறுப்பும் வழங்கப்படவில்லை” என்று தெரிவித்துள்ளார்.

## பாஸ்போர்ட் இணையதளம் நாளை வரை செயல்படாது

**புதுடெல்லி, அக். 06-**

பாஸ்போர்ட் சேவை இணையதளத்தில் தொழில்நுட்ப பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் காரணமாக பாஸ்போர் இணையதளம் நாளை வரை இயங்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:- பாஸ்போர்ட் சேவை இணையதளத்தில் (www.passportindia.gov.in) தொழில்நுட்ப பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் காரணமாக இந்த இணையதளம் 4-ந் தேதி (நேற்று முன்தினம்) இரவு 8 மணி முதல் நாளை (திங்கட்கிழமை) காலை 6 மணி வரை இயங்காது. இந்த குறிப்பிட்ட காலக்கட்டத்தில் பாஸ்போர்ட் விண்ணப்பதாரர்கள், இணையதளத்தை பயன்படுத்த முடியாது என்பதோடு, தங்களது நேர ஒதுக்கீடு, சந்தேகங்களுக்கு, பராமரிப்பு பணி முடிந்த பிறகு அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்க இடஒதுக்கீட்டில் தற்போது உள்ள 50 சதவீத உச்சவரம்பை நீக்குவது அவசியம். இடஒதுக்கீட்டில் உள்ள 50 சதவீத உச்சவரம்பை நீக்குவதற்கான சட்டங்களை இயற்றுவதை காங்கிரஸ் கட்சியும், 'இன்டியா' கூட்டணியும் உறுதி செய்யும்.

**- ராகுல் காந்தி**



எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி தண்டம் விதிக்கப்பட்டும், சிறை தண்டனை விதிக்கப்பட்டும் இலங்கை சிறைகளில் வாடும் தமிழ்நாட்டு மீனவர்களை அவர்களின் படகுகளுடன் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விவகாரத்தில் சிங்கள அரசின் அட்டகாசத்துக்கு முடிவு கட்ட வேண்டும்.

**- ராமதாஸ்**



தமிழ்நாடு அரசு சாம்சங் இந்தியா நிறுவனத்திற்கு அறிவுறுத்தல் வழங்கி தொழிற்சங்கம் முன் வைத்திருக்கும் கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை நடத்தி சுமூகத் தீர்வு காண வேண்டும். தொழிலாளர்களின் முக்கியக் கோரிக்கையான, சாம்சங் இந்தியா தொழிலாளர் சங்கத்தை, தமிழ்நாடு தொழிலாளர் துறை பதிவு செய்து சான்றிதழ் வழங்க வேண்டும்.

**- வைகோ**



பட்டதாரி ஆசிரியர்களுக்கு 80 நாட்களாகியும் பணி நியமன ஆணை வழங்காமல் தமிழக அரசு இழுத்தடிப்பதா? போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 3192 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் உடனடியாக பணி நியமன ஆணைகளை வழங்கி அவர்களின் மன உளைச்சலைப் போக்கி தமிழக அரசு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

**- அன்புமணி**

### சிவகங்கை மாவட்டத்தில் கடந்தாண்டில்
# 2,260 மாணாக்கர்களுக்கு ரூ.35.64 கோடியில் கல்வி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது
### அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பெருமிதம்



**சிவகங்கை,அக். 06-**
சிவகங்கை மாவட்டத்தில் கடந்தாண்டு நான்கு முகாம்கள் நடத்தப்பட்டு, அதன் வாயிலாக 2,260 மாணாக்கர்களுக்கு ரூ.35.64 கோடி மதிப்பீட்டில் கல்விக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்தார். சிவகங்கை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மருதுபாண்டியர் நகர், அரசு மேல்நிலைப் பள்ளி கலையரங்கத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் கல்லூரி மாபெரும் சிறப்பு கல்வி கடன் முகாம் நடைபெற்றது. அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன், மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித், தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில், மாணாக்கர்களுக்கு கல்வி கடனுதவிக்கான ஆணைகளை வழங்கி தெரிவிக்கையில், இம்முகாமினை முன்னிட்டு நாளாது தேதி வரை விண்ணப்பித்த மாணாக்கர்களுக்கு, அந்தந்த வங்கிகளினால் அனுமதிக்கப்பட்டு, அதன்படி மொத்தம் 32 மாணாக்கர்களுக்கு ரூ.02.10 கோடி மதிப்பீட்டிலான கல்வி கடன் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இம்முகாமில் கலந்து கொண்ட மாணாக்கர்கள் புதிய கல்வி கடனுதவிகள் பெறுவதற்கும், விண்ணப்பங்களை வங்கி அலுவலர்களிடம் சமர்ப்பித்துள்ளனர். தகுதியான மாணாக்கர்களுக்கு கடன் அனுமதி உத்தரவுகளை இரண்டு வாரங்களில் கிடைக்கப்பெற செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டு மாவட்டத்தில் நான்கு முகாம்கள் நடத்தப்பட்டு, அதன் வாயிலாக 2,260 மாணாக்கர்களுக்கு ரூ.35.64 கோடி மதிப்பீட்டில் கல்விக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 3,000 நபர்களுக்கு கல்விக்கடன் உதவிகள் வழங்க இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டு, தற்சமயம் வரை மொத்தம் 956 மாணாக்கர்களுக்கு ரூ.14.65 கோடி மதிப்பீட்டில் கல்விக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இம்முகாமினைப் போன்று, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையில் முகாம்கள் நடத்தி, கல்விக்கடனுதவிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், கல்வி கடன் பெற்றுள்ள மாணாக்கர்கள், இதனை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டு, வங்கிக்கடன்களை சரிவர செலுத்தி, சிறப்பாக பயின்று, தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இம்முகாமில், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ்.பிரவீன் குமார், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மண்டல துணை மேலாளர் செல்வநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அன்பு, சிவகங்கை ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மஞ்சுளா பாலசந்தர், சிவகங்கை நகர்மன்ற துணைத்தலைவர் ம.கார்கண்ணன், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) வடிவேலு, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஆரோக்கிய சாந்தாராணி, அனைத்து வங்கியாளர்கள், மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**அருப்புக்கோட்டை அமுதலிங்கேஸ்வரர் திருக்கோவிலில் புரட்டாசி மாதம் 3வது சனிக்கிழமை முன்னிட்டு வரதராஜ பெருமாள் வெள்ளிக் கவசத்தில் பொதுமக்களுக்கு அருள் பாலித்த காட்சி.**

# நத்தம் வேணுராஜகோபாலசுவாமி கோவிலில் புரட்டாசி சனி வாரவிழா



**நத்தம், அக். 6-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கோவில்பட்டி அக்ரஹாரத்தில் உள்ள பாமாருக்மணி சமேத வேணுராஜகோபால கோவிலில் புரட்டாசி மாத மூன்றாவது சனிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதையொட்டி மூலவருக்கும், உற்சவருக்கும் 16 வகையான அபிஷேகங்களும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.தொடர்ந்து பக்தர்கள் துளசி, மல்லிகை,ரோஜா உள்ளிட்ட பல்வேறு பூ மாலைகளை காணிக்கையாக செலுத்தி சுவாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கபட்டது.இதைப்போலவே கோவில்பட்டி வீர ஆஞ்சநேயர் கோவிலிலும் புரட்டாசி 3-வது சனிக்கிழமையையொட்டி சிறப்பு அபிஷேகங்களும், பூஜைகளும், தீபாராதனைகளும் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# ஒட்டன்சத்திரத்தில் தேசிய மின்னணு வேளாண் சந்தையில் தேங்காய் ஏலம்



**ஒட்டன்சத்திரம், அக். 6-**
திண்டுக்கல் மாவட்டம்ஒட்டன்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடைபெற்ற தேசிய மின்னணு வேளாண் சந்தை ஏலத்தில் இதில் 250 குவிண்டால் உரித்த தேங்காய் வரத்து வந்தது.

உரித்த தேங்காய் குவிண்டாலுக்கு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.3800/-க்கும்,குறைந்தபட்சமாக ரூ.3600/- க்கும் ஏலம் போனது.ஏலத்தில் சத்திரப்பட்டியை சேர்ந்த விவசாயிகளும் ,ஒட்டன்சத்திரம் பகுதி வியாபாரிகளும் கலந்து கொண்டனர். ஏலத்தினை ஒட்டன்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சிவராமகிருஷ்ணன், இளநிலை உதவியாளர் இந்துமதி,மண்டி ஆய்வாளர்அசோக்குமார் உள்ளிட்டோர் நடத்தினார்.



**பரமக்குடி அருகேயுள்ள இலந்தைக்குளம் கிராமத்தின் அருகே நான்குவழிச் சாலையில் அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் இரண்டு வயது பெண் புள்ளிமான் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது. கமுதக்குடி வன அலுவலர் அன்பரசி உயிரிழந்த மானை கைப்பற்றி விசாரணை செய்து வருகிறார்.**

# முதுகுளத்தூர் : இடி விழுந்து முதியவர் பலி

**முதுகுளத்தூர், அக். 6-**
இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே வீரம்பல் கிராமத்தைச் சேர்ந்த ஜோதி மகன் சாலமன் வயது (65) அதே கிராமத்தைச் சேர்ந்த சாமுவேல் மகன் கபிலன் வயது (57) மார்க் மனைவி பஞ்சவர்ணம் வயசு (60) உள்ளிட்டோர் வீரம்பல் கிராமம் அருகே கரிமூட்டம் போடுவதற்கு விறகு அடுக்கி கொண்டிருக்கும் பொழுது மழை பெய்தது அதைத் தொடர்ந்து மதிய உணவு சாப்பிடுவதற்கு அருகில் உள்ள கொட்டகையில் அமர்ந்து இருந்தனர். பலத்த இடியுடன் கூடிய மழை பெய்து கொண்டிருந்தது திடீரென அருகே உள்ள மரத்தில் இடி விழுந்ததில் சம்பவ இடத்திலேயே சாலமன் உடல் கருகி இறந்துவிட்டார். உடன் இருந்த கபிலன், பஞ்சவர்ணம் ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் குறித்து இளஞ்செம்பூர் காவல் ஆய்வாளர் முத்துப்பாண்டியன் தலைமையிலான காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# அனைவருக்கும் அ.தி.மு.க. உறுப்பினர் சீட்டு தவறாது கிடைத்திட வேண்டும்
### முன்னாள் அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் அறிவுறுத்தல்



**திண்டுக்கல், அக். 06-**
திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயல் வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் நத்தம் இரா விசுவநாதன் தலைமை தாங்கினார். கூட்டத்திற்கு மாநில அம்மா பேரவை இணை செயலாளர் ஆர்.வி.என்.கண்ணன், சட்டமன்ற உறுப்பினர் தேன்மொழி சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் முன்னாள் அமைச்சர் நத்தம் இரா விசுவநாதன் சிறப்புரையாற்றுகையில்,

பொதுச்செயலாளர் எடப்பாடியார் உத்தரவுக்கிணங்க உறுப்பினர் உரிமைச் சீட்டு அனைவருக்கும் சென்றடைந்து இருக்க வேண்டும். இதில் நிர்வாகிகள் கவனமுடன் செயல்பட்டு உறுப்பினர் அட்டை அனைவருக்கும் சென்றடைந்து உள்ளதா? என கண்காணிக்க வேண்டும்.

வராத நபர்கள் யாரும் இருந்தால் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும். ஒரு உறுப்பினருக்கு கூட உரிமை அட்டை கிடைக்காத நிலை இருக்கக் கூடாது என்ற நிலையை நிர்வாகிகள் உறுதிப்படுத்த வேண்டும்.

இதற்காக நகர, ஒன்றிய பேரூராட்சிகள் வாரியாக செயல்வீரர்கள் செயல் வீராங்கனை ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டும்.

கூட்டம் நடைபெற்ற விபரத்தை மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு தெரிவித்து அதனை கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். அதேபோல், சொத்து வரி உயர்வை கண்டித்து கிழக்கு மாவட்ட நகர, ஒன்றிய, பேரூராட்சி பகுதிகளில் வரும் 8-ம் தேதி தேதி நடைபெறும் மனித சங்கிலி போராட்டத்தில் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என தெரிவித்தார்.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் கே.எஸ்.என். வேணுகோபால், மாவட்ட துணை செயலாளர் விஜயபாலமுருகன், இணை செயலாளர் சந்திரா கோபாலகிருஷ்ணன், கொடைக்கானல் நகர செயலாளர் எம்.ஸ்ரீதர், திண்டுக்கல் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகன், சாணார்பட்டி ஒன்றிய செயலாளர் இராமராசு, சுப்பிரமணி நிலக்கோட்டை ஒன்றிய செயலாளர்கள் யாகப்பன், நல்லதம்பி, பேரூர் செயலாளர் சேகர், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய செயலாளர்கள் சேம்பர் ஆரோக்கியசாமி, ஆர்.கே. சுப்பிரமணி, ஆத்தூர் ஒன்றிய செயலாளர் சின்னச்சாமி, மயில்சாமி, அம்மையநாயக்கனூர் பேரூர் செயலாளர் தண்டபாணி, அகரம் பேரூர் செயலாளர் சக்திவேல், தாடிக்கொம்பு பேரூர் செயலாளர் முத்தையா, பழனி ஒன்றிய செயலாளர்கள் முத்துச்சாமி, மாரியப்பன், நகர செயலாளர் முருகானந்தம், வத்தலகுண்டு ஒன்றிய செயலாளர் மோகன், பாண்டியன், பேரூர் செயலாளர் பீர் முகமது, கொடைக்கானல் ஒன்றிய செயலாளர்கள் தாமோதரன், சண்முகசுந்தரம், நத்தம் ஒன்றிய செயலாளர் மணிகண்டன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் ராஜமோகன் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் யூசுப் அன்சாரி, வர்த்தக அணி செயலாளர் பாலு, மாணவர் அணி செயலாளர் கோபி, மகளிர் அணி செயலாளர் வளர்மதி, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் சுப்பிரமணி, ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் விஜயன், பொதுக்குழு உறுப்பினர்கள் மேட்டுக்கடை செல்வராஜ், சுகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்கதுரை, தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சதீஷ் குமார், மதுரை மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர் தினேஷ் குமார், ரெட்டியார்சத்திரம் ஜெயசீலன் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



**மதுரை மாநகர் மத்திய 6-ம் பகுதி 51-வது வடக்கு வட்ட அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூவின் ஆணைக்கிணங்க வடக்கு மாசி வீதி ராமானுஜ கூடத்தில் வட்டச் செயலாளர் எஸ்.சௌந்தரராஜன் தலைமையில் நடைபெற்ற புதிய நிர்வாகிகள் மற்றும் புதிய உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பகுதி செயலாளர் எம்.ஜி.ராமச்சந்திரன் ஆலோசனைகளை வழங்கி புதிய உறுப்பினர் அட்டைகளை வழங்கினார். இதில் நிர்வாகிகள் ஞானசேகரன், எம்.ஏ.நாசர், கார்னர் பாஸ்கர், திடீர் நகர் பாலா, இளைஞர் அணி கண்ணன், கூடல் நகர் பிரேம்குமார், கார்த்திக், ராஜீவ் மற்றும் 51-வது வட்ட நிர்வாகிகள் யமுனா, குமரவேல், ஜெயராமன், கேசவன், ரெட், பழனி, மனோகரன், தாமோதரன் கண்ணன், அசோக்,ராம்பிரசாத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

# மருதாநதி ஆற்றின் குறுக்கே ரூ.4.71 கோடியில் ராஜவாய்க்கால் நவீனப்படுத்தும் பணி
### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



**வத்தலக்குண்டு, அக். 6-**
திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே மருதாநதி ஆற்றின் குறுக்கே அய்யம்பாளையத்தில், தமிழக அரசின் நீர்வளத்துறை சார்பில் பாசன நிலங்கள் பயன் பெறும் வகையில், 4 கோடியே 71 லட்சத்தில்,ராஜ வாய்க்கால்நவீனப்படுத்தும் திட்டத்தைதலைமைச்செயலகத்திலிருந்து, காணொளி வாயிலாக முதல்வர் மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக திட்ட பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு, தற்போது அனைத்து பணிகளும் முடிவு அடைந்துள்ளன.

இந்நிலையில்ராஜவாய்க்கால்திட்டத்தை முதல் அமைச்சர் மு க ஸ்டாலின் தொடங்கி வைத்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறைஅதிகாரிகள், மஞ்சாளாறு அணை பெரியகுளம் கோட்டப்பொறியாளர் சரவணன், மருதாநதி அணை உதவி பொறியாளர் கண்ணன் பங்கேற்றனர் ஆத்தூர் ஒன்றிய செயலாளர் ராமர், திண்டுக்கல் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், அய்யம்பாளையம் பேரூர் செயலாளர் தங்கராஜ், அய்யம்பாளையம்பேரூராட்சி தலைவர்ரேகாஐயப்பன், மற்றும் முத்துராஜ், வீரபுத்திரன் விவசாயிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இது குறித்து மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பாஸ்கரன் கூறும்போது, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ரெட்டியார்சத்திரம் மற்றும் ஆத்தூர் தொகுதி அய்யம்பாளையம் பகுதியில் உள்ள, அணைக்கட்டுகளை கட்டி,வாய்க்கால்களை தூர் வாரும் பணிகளை நிறைவேற்றிக் கொடுத்து, 6000-க்கும் மேற்பட்ட விவசாய பெருமக்களுக்கு, உளவடை செய்வதற்கும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை பெருக்கிடவும் தற்போது இந்த அணைக்கட்டு முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த நிகழ்ச்சி மூலமாக நமது விவசாயிகள் அனைத்து விவசாயிகள் மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

தமிழக முதல்வருக்கும் பரிந்துரை செய்த ஊரக வளர்ச்சிதுறை அமைச்சருக்கும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும், நன்றியை தெரிவித்துக்கொள்வதாக கூறினார்.

### துணை முதல்வர் உதயநிதி குறித்து விமர்சனம் செய்த
# பவன் கல்யாணுக்கு விருதுநகர் எம்.பி. ப.மாணிக்கம் தாகூர் கடும் கண்டனம்



**திருமங்கலம், அக். 06-**
தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் குறித்து விமர்சனம் செய்த ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாணுக்கு, விருதுநகர் எம்.பி., ப.மாணிக்கம் தாகூர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகேயுள்ள கருவேலம்பட்டி கிராமத்தில் அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த சமுதாயக்கூடம், விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த சமுதாயக் கூடத்தின் திறப்பு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவில் விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் ப.மாணிக்கம் தாகூர் கலந்து கொண்டு புதிய சமுதாய கூடத்தினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த எம்.பி., மாணிக்கம் தாகூர் கூறுகையில் :

ஆந்திராவின் துணை முதல் அமைச்சர் பவன் கல்யாண் திருப்பதி லட்டு பிரச்சனையில் அவர்கள் அரசாங்கம் செய்த தவறை மறைப்பதற்காக ஆர்.எஸ்.எஸ்.காரர்களின் ஏஜென்ட் போல் செயல்படுகிறார். சங்கிகளின் மொழியை பேசுகின்ற பவன் கல்யாணை நாங்கள் கண்டிக்கின்றோம். அடுத்த மாநிலங்களின் பிரச்சனைகளை பற்றி பேசுவது,

முதலில் கார்த்திக்கை பற்றி பேசினார். தற்போது தமிழக துணை முதலமைச்சர் பற்றி பேசியிருக்கிறார். அரசியலில் பிழைப்பு நடத்துவதற்காக இப்படி பேசுவது அறுவறுக்கத்தக்கது. அதை நாங்கள் கண்டிக்கின்றோம்.

திருமாவளவனின் மது விலக்கு முன்னெடுப்பை நாங்கள் பாராட்டுகிறோம். அதை கொச்சைப்படுத்தி பேசுவது அன்புமணி ராமதாஸ் உடைய உள்ளுணர்வை காட்டுகிறது. உங்களுக்கு ஒருவரை பிடிக்கவில்லை என்றாலும் அவர்கள் செய்யும் நல்லதை பாராட்ட வேண்டும். அது தான் மக்கள் நலன் அரசியல் வாதியின் பாங்காக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கருவேலம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் யோகேஸ்வரி செல்வம், துணை தலைவர் பிரியா கண்ணன், வட்டார தலைவர்கள் முருகன், முத்துவேல், காங்கிரஸ் நிர்வாகி உலகநாதன், முன்னாள் ஊராட்சி தலைவர் வெள்ளைச்சாமி, ஊராட்சி செயலாளர் ஜெகதீஸ், மற்றும் சரவணன், பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



**அருப்புக்கோட்டை நாடார்கள் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட முத்துமாரியம்மன் திருக்கோவிலில் நவராத்திரி கொலு பொம்மைகள் வைக்கப்பட்டுள்ள காட்சி.**

# அரியலூர் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 128 பேருக்கு தனியார் துறை பணிக்கான ஆணை

## கலெக்டர் பொ.இரத்தினசாமி வழங்கினார்



**அரியலூர்,அக்.06-**

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு கலைக்கல்லூரியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை கலெக்டர் பொ.இரத்தினசாமி, துவக்கி வைத்து, 04 மாற்றுத்திறனாளிகள் உட்பட 128 நபர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா , ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை துவக்கி வைத்து, வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர்களுக்கு பணியமர்வு ஆணை வழங்கி கலெக்டர் பேசியதாவது.

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசால் இத்தகைய தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. தனியார் துறையில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் வெளிநாடுகளுக்கு சென்று அந்நிய முதலீடுகளை தமிழ்நாட்டை நோக்கி ஈர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டதன் காரணமாக தமிழ்நாட்டில் அந்நிய முதலீடுகள் அதிகளவில் ஈர்க்கப்பட்டு வருகிறது. அந்நிய முதலீடுகள் மேற்கொள்வதால் பல்வேறு நிலைகளில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த இயலும். படித்து முடித்தவுடன் வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் இளைஞர்கள் தங்களது திறனை மேம்படுத்திக் கொள்ளவேண்டும்.

உழைப்பு இருந்தால் உயர்ந்த நிலைகளை அடைய முடியும். விடாமுயற்சி, கடின உழைப்பு, ஆர்வம் இவை மூன்றும் இருந்தால் திறன் தானாகவே வளரும். நிறுவனங்களில் பணிபுரியும் போது அந்நிறுவனத்தின் நிலை உயர்வதற்கு உழைத்தால் வாழ்க்கை தரமும் உயரும். பல்வேறு மாவட்டங்களுக்கு சென்று பணிபுரிவதற்கு இளைஞர்கள் தயாராக இருக்கவேண்டும். உலகமயமாக்கல் பின்பு முன்னேறி மாவட்டமாக இருந்தாலும், பின்தங்கிய மாவட்டமாக இருந்தாலும் வேலை கிடைக்கும் இடங்களுக்கு சென்று பணியாற்றினால்தான் திறனை மேம்படுத்திக் கொள்ள முடியும். படித்து முடித்தவுடன் ஒவ்வொருவரும் தங்களுக்கு பிடித்தமான துறையில் தனித்திறனை வெளிபடுத்த வேண்டும். அதன் மூலம் உங்களது பெற்றோர்களுக்கு வாழ்வில் வளமான நிலையை ஏற்படுத்த வேண்டும். தனியார் துறை வேலைவாய்ப்பு பெறுவதற்கான முதல்நிலை என்பது மிகவும் சவாலானதாகும். அந்த வாய்ப்பை தமிழ்நாடு அரசு இத்தகைய சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் ஏற்படுத்தி தருகிறது. எனவே இவ்வேலைவாய்ப்பு முகாம்களை பயன்படுத்திக் கொண்டு வேலைவாய்ப்பினை பெற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என கலெக்டர் பொ.இரத்தினசாமி, தெரிவித்தார். 18 வயது முதல் 45 வயது வரையிலான 8-ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் 10-ஆம் வகுப்பு (தேர்ச்சி / தோல்வி) முடித்த வேலைநாடுநர்கள் பங்கேற்று வேலைவாய்ப்பு பெறும் வகையில் நடத்தப்பட்டது. மேலும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்காக உதவித்தொகை திட்டத்தின் கீழ் உதவித்தொகை பதிவுகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. சுயதொழில் தொடங்க ஆர்வம் உள்ளவர்களுக்கு மாவட்ட தொழில் மையம், தாட்கோ போன்ற நிறுவனங்களின் மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள், சுயதொழில் உருவாக்கும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

தேசிய அளவிலான தனியார் வேலை இணையதள சேர்க்கை முகாம்களும், தொழில் பழகுநர் பயிற்சிக்கான சேர்க்கை முகாம்களும் மற்றும் தமிழ்நாடு தனியார் வேலைவாய்ப்பு இணையதள சேர்க்கை முகாம்களும் நடத்தப்பட்டது. கல்வித் தகுதிக்கேற்ப தனியார் துறை வேலைவாய்ப்பு குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.10,000 முதல் ரூ.25,000 வரை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தில் வழங்கப்படும் இலவச பயிற்சி வகுப்புகளுக்கு சேர்க்கை முகாமும் நடத்தப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளுக்கான விண்ணப்பங்களும் வழங்கப்பட்டதுடன், அயல்நாட்டு வேலைவாய்ப்புக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் ரவிச்சந்திரன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கலைச்செல்வன், அரியலூர் அரசு கலை கல்லூரி முதல்வர் ரவிச்சந்திரன், வேலைவாய்ப்பு உதவியாளர் ராஜா மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகள்

## கலெக்டர் தி.சாரு ஸ்ரீ வழங்கினார்



**திருவாரூர்,அக்.06-**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி இராஜகோபால சுவாமி அரசு கலைக்கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு ஊரக, நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு தேர்வானவர்களுக்கு பணிநியமன ஆணைகளை கலெக்டர் தி.சாருஸ்ரீ., வழங்கினார்.

கலெக்டர் தி.சாருஸ்ரீ., தெரிவித்ததாவது....

2023-2024 ஆம் நிதியாண்டில் 365 பெரிய மற்றும் சிறிய அளவிலான வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இவ்வேலைவாய்ப்பு முகாம்களில் 18981 வேலையளிப்பவர்களும் 3,48,885 வேலைநாடுநர்களும் பங்கேற்றனர். முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 100 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 42,261 வேலைநாடுநர்கள் பணிநியமனம் பெற்றுள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பதவியேற்றது முதல் 2,01,596 வேலைநாடுநர்கள் பல்வேறு தனியார் துறை நிறுவனங்களில் பணிநியமனம் பெற்றுள்ளனர். 22.07.2023 அன்று முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநிலக் கல்லூhயில் நடைபெற்ற முதலாவது சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரமாவது பணிநியமன ஆணையினை வழங்கினார்.

24.02.2024 அன்று டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இராணி மேரி கல்லூரியில் நடைபெற்ற 100 வது வேலைவாய்ப்பு முகாமில் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும் இரண்டு இலட்சமாவது பணி நியமன ஆணையினை வழங்கினார்கள். ħவவிள:ஃஃற றூ.வarpசர்யவஞநஅடிடிலா.வ.ப மூஎ.in என்ற இணையதளம் மூலமாகவும் வேலைநாடுநர்களுக்கு வேலையளிப்பவர்களால் தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் மூலமாக பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் ரூ.4.22 கோடி செலவில் நடத்தப்பட்டதன் மூலமாக 18,359 மாணவஃமாணவியர்கள் கலந்து கொண்டதில் 1,925 மாணவஃமாணவியர்கள் பல்வேறு துறைகளில் பணிநியமனம் பெற்றுள்ளனர். ħவவிள:ஃஃற றூ.வயுஅடிஎயயெனஉயசநந சஸநசஸஉநள.வபமள.in என்ற இணையதளம் வாயிலாக தொலைதூரங்களில் வசிக்கும் மாணவஃமாணவியர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான 410 மென்பாடக் குறிப்புகள் பதிவேற்றப்பட்டதில் 3,10,284 மாணவஃமாணவியர்கள்; பதிவு செய்து 36,55,305 முறை இம்மென்பாடக்குறிப்புகள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி உள்ளனர். இக்காணொலிகளை இத்துறையின் வுN வயவுசநநசெ ஹ ஊயடிநெட-ல் பதிவேற்றப்பட்டத்தில் 1,46,000 சந்தாதாரர்கள் இலவசமாக பயன்படுத்தி உள்ளனர்.

கல்லூரிகளில் பயின்று கொண்டிருக்கும் மாணவஃமாணவியர்கள்; போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள உதவும் வகையில் 10 பல்கலைகழகங்களில் 76 இலவச பயிற்சி வகுப்புகள் ரூ.50 இலட்சம் செலவில் நடத்தப்பட்டதில் 4,476 மாணவஃமாணவியர்கள்; பயனடைந்துள்ளனர். பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவஃமாணவியர்கள்; தங்களின் எதிர்கால வாழ்க்கைத் தொழிலை தெரிவு செய்துள்ள 38 மாவட்டங்களிலும் சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டதில் 14,803 மாணவஃமாணவியர்கள்; பயன்பெற்றுள்ளனர். பள்ளி மற்றும் கல்லூரிகளில் 1,957 தொழில்நெறி வழிகாட்டும் உரைகள் வழங்கப்பட்டு 2,81,339 மாணவஃமாணவியர்கள்; பயனடைந்துள்ளனர். மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் வாயிலாக பள்ளிஃகல்லூரி 1,240 மாணவஃமாணவியர்களுக்கு உள அளவியல் சோதனை தேர்வுக்குட்படுத்தப்பட்டு வாழ்க்கைத் தொழிலை தெரிவு செய்ய வழிகாட்டப்பட்டுள்ளது என கலெக்டர் தி.சாருஸ்ரீ., தெரிவித்தார்.

இம்முகாமில் தொழில்நுட்ப, சேவைத்துறை, விற்பனைத் துறைகளை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 75 தனியார்துறை நிறுவனங்கள் பங்கேற்றன. சுமார் 1500 தகுதியுள்ள நபர்களை இம்முகாமில் கலந்துகொண்டனர். மேலும், இம்முகாமில் முதற்கட்டமாக 30 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை கலெக்டர் தி.சாருஸ்ரீ., ; வழங்கினார்கள். இந்நிகச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி திட்ட இயக்குநர் ஃ மகளிர் திட்டம் ஜோதிமணி, திறன்மேம்பாட்டுக்கழக உதவி இயக்குநர் செந்தில்குமாரி, மன்னார்குடி இராஜகோபாலசுவாமி அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர்.க ணே சன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் வெங்கடேசன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி கடனுதவி முகாம்: கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது



**தஞ்சாவூர்,அக்.06-**

தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் பாரத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் முன்னோடி வங்கி அனைத்து வங்கிகளுடன் இணைந்து உயர்கல்விப் பயிலும் மாணாக்கர்களுக்கு கல்விக் கடனுதவி முகாம்

கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் (05.10.2024) நடைபெற்றது.

தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி , மாநகராட்சி மேயர் சண்,இராமநாதன் , மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. 12 வங்கிகள் இம்முகாமில் கலந்து கொண்டனர். 128 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு விண்ணப்பம் செய்தனர். இம்முகாமில் 68 பேருக்கு ரூபாய் 5 கோடியே 38 இலட்சம் மதிப்பிலான வங்கிக் கடனுதவிக்கான காசோலைகளை வழங்கி மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது. தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் 919 பேருக்கு ரூ.10.80 கோடி வங்கிக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. 4000 பேருக்கு நடப்பாண்டு வங்கிக் கடனுதவி வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள 1457 விண்ணப்பங்களின் மீது சம்பந்தப்பட்ட வங்கியாளர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு வங்கி கடனுதவிகள் வழங்கிட முன்வர வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி உயர்கல்வி ஊக்கப்படுத்திட இதுபோன்ற வங்கிக் கடனுதவி முகாம்கள் நடத்தப்படுகிறது. மாணவர்கள் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் , தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் இலக்கியா , இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் நாகேஸ்வர ராவ் , முன்னோடி வங்கிகள் மேலாளர் ர.பிரதீப் கண்ணன் , பாரத் கல்லூரி தாளாளர் புனிதா கணேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்டம்

# தரங்கம்பாடியில் டேனிஷ் கோட்டை புதுப்பிக்கப்பட்டு வரும் பணி: சுற்றுலாத்துறை ஆணையர் சி.சமயமூர்த்தி, கலெக்டர் ஏ.பி.மகாபாரதி ஆகியோர் ஆய்வு



**மயிலாடுதுறை,அக்.06-**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் பூம்புகார் சுற்றுலா வளாகம் ரூ.23 கோடியே 60 லட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருவதையும், தரங்கம்பாடியில் டேனிஷ் கோட்டை ரூ.4 கோடியே 35 லட்சத்து 7 ஆயிரம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு வருவதையும் சுற்றுலாத்துறை ஆணையர் சி.சமயமூர்த்தி மாவட்ட கலெக்டர் .ஏ.பி.மகாபாரதி முன்னிலையில் ஆய்வு செய்தார்கள்.

பூம்புகார் சுற்றுலா வளாகம் ரூ.26 கோடியே 60 லட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி சுற்றுசுவர் கட்டுதல்,வாகனம் நிறுத்துமிடம்,கழிப்பறை,பொருள் வைப்பறை, நுழைவுச்சீட்டு அறை,தகவல் கூடம்,புரோமினேடு, எலக்டீரிக்கல் பணி,பராம்பரிய விளக்கு வசதி,சிலப்பதிகார கலைக்கூடம் புனரமைப்பு பணிகள் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை பார்வையிட்ட சுற்றுலாத்துறை ஆணையர் பணிகளின் தரத்தினை ஆய்வு செய்தார்கள்.சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். சுற்றுலா வளாகத்தில் மரக்கன்று வைக்கும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட சுற்றுலாத்துறை ஆணையர் பணிகளை விரைவாக மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். தொடர்ந்து கலைக்கூடத்தை பார்வையிட்ட சுற்றுலாத்துறை ஆணையர் பணிகளை சுற்றுலா பயணிகள் விரும்பும் வகையில் கலைநயத்துடன் மேற்கொள்ள வேண்டும்.ஒப்பந்தகாலகெடு காலத்திற்குள் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என பொறியாளருக்கு; அறிவுறுத்தினார்கள்.

பின்னர் தரங்கம்பாடியில் 36 ஆயிரத்து 410 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம்,முதல்தளத்துடன்கூடிய டேனிஷ் கோட்டையானது ரூ.3 கோடியே 63 லட்சத்து 47 ஆயிரம் மதிப்பிட்டில் புதுப்பிக்கப்பட்டு வருவதை சுற்றுலாத்துறை ஆணையர் சி.சமயமூர்த்தி இ.ஆ.ப.,அவர்களும், மாவட்ட கலெக்டர்.ஏ.பி.மகாபாரதி இ.ஆ.ப.,அவர்களும் பழமை மாறாமல் கட்டுமான பணிகள் நடைபெற்றுள்ளதை ஆய்வு செய்தார்கள். மேலும் தரைத்தளம்,முதல்தளத்தில் இதுவரை நடைபெற்றுள்ள புதுப்பிக்கும் பணிகள் தொடர்பாக பொறியாளர்களிடம் விரிவாக கேட்டறிந்தார்கள் ஒப்பந்தகால கேடுவிற்குள் பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களிடம் சுற்றுலாத்துறை ஆணையர் அறிவுறுத்தினார்கள் இவ்வாய்வின்போது சீர்காழி வருவாய் கோட்டாட்சியர்.உ.அர்ச்சனா, தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் .சுகுண சங்கரி குமரவேல், மாவட்ட சுற்றுலா அலுவலர் ராஜ கஜேந்திரகுமார், தரங்கம்பாடி பேரூராட்சி துணை தலைவர் பொன் இராஜேந்திரன், தொல்லியல்துறை உதவி பொறியாளர் .தினேஷ், பொதுப்பணித்துறை (கட்டிடம் மற்றும் கட்டுமான பராமரிப்பு பணிகள்) கேசவன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திருப்புகலூர் ஊராட்சியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

**நாகப்பட்டினம்,அக்.06-**

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருப்புகலூர் ஊராட்சி வவ்வாலடியில் திருக்கண்ணபுரம் காவல் நிலையம் சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார்.திருக்கண்ணபுரம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் விவேக் ரவிராஜ் முன்னிலை வகித்து பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்து பேசினார்.இதில் தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம்,மது அருந்திவிட்டு வாகனம் ஓட்ட கூடாது,வாகனம் ஓட்டும் போது கைபேசி உபயோகப்படுத்துவதை தவிர்க்க வேண்டும்,

பேருந்தில் படியில் பயணம் செய்வதை தவிர்ப்போம் என்பன உள்ளிட்ட பல்வேறு சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. இதில் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர்கள் கண்ணதாசன்,விஜயகுமாரி,தலைமை காவலர்கள் நீலகண்டன், கேசவராஜ், ஊராட்சி செயலர்கள் ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நீடாமங்கலம் எடகீழையூரில் என்.எஸ்.எஸ். முகாமில் உயர் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

**நீடாமங்கலம்,அக்.06-**

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ஒன்றியம் எடமேலையூர் அரசு மேல்நிலைப் பள்ளியின் நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் எட கீழையூர் கிராமத்தில் நடைபெற்று வருகிறது. முகாமில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உயர்கல்வி வழிகாட்டுதல் மற்றும் போதை பொருள் தடுப்பு சார்ந்த தலைப்புகளில் முகாம் திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகிறது. முகாமின் ஐந்தாம் நாள் நிகழ்வாக நேற்று உயர்கல்விக்கு வழிகாட்டுதல் நிகழ்ச்சி எடகீழையூர் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. என்எஸ்எஸ் திட்ட அலுவலர் அலெக்சாண்டர் தலைமை வகித்தார். மன்னார்குடி தேசிய மேல்நிலைப் பள்ளியின் முதுகலை ஆசிரியரும் தன்னம்பிக்கை பயிற்சியாளருமான முனைவர் அன்பரசு சிறப்பு விருந்தினராக பங்கேற்று உயர்கல்வி வழிகாட்டுதல் விழிப்புணர்வை நடத்தினார்.செயற்கை நுண்ணறிவு, வேளாண்மை, நீட் தேர்வு இல்லாத மருத்துவ படிப்புகள், கவின் கலை மற்றும் இசை படிப்புகள், ராணுவ அதிகாரி பணி, வடிவமைப்புப்கலை படிப்புகள், உணவுத் தொழில் நுட்ப படிப்புகள், புலனாய்வுத்துறை படிப்புகள், தமிழக அரசு மற்றும் ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றில் வேலைவாய்ப்புகளைப் பெற தேவையான பயிற்சிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.நிகழ்வில் சுமார் 50 மாணவர்கள் பங்கேற்று பலனடைந்தனர்.தொடர்ந்து பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது.நிறைவாக உடற்கல்வி ஆசிரியர் அறிவழகன் நன்றி கூறினார்

# கரூர் மாவட்டத்தில் 41 சாலைகள் 53 கிலோ மீட்டர் நீளத்தில் ரூ. 1500 லட்சம் மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது

## கலெக்டர் மீ.தங்கவேல் செய்தியாளர்கள் பயணத்தில் தகவல்

**கரூர்,அக்.06-**

கரூர் மாவட்டம் தான்தோன்றி ஊராட்சி ஒன்றியம் பாகநத்தம் மற்றும் மூக்கணாங்குறிச்சி ஊராட்சிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்ட பணிகள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் புதிய குளம் அமைக்கும் பணியினை கலெக்டர் மீ.தங்கவேல், (05.10.2024) செய்தியாளர்களுடன் செய்தியாளர் பயணம் மேற்கொண்டு பார்வையிட்டார்கள். இதுகுறித்து கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களில் உள்ள பொதுமக்கள் தங்கள் தேவைகளுக்காக நகர்புறங்களை நோக்கி வருவதை எளிமையாக்கும் வகையில்



முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் மூலம் சாலைகளை மேம்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் 2024-25 ஆண்டிடில் கரூர் மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களிலும் 41 சாலைகள் 52.695 கிலோமீட்டர் நீளத்தில் ரூ.1500 லட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடிவுறும் போது பொதுமக்கள் நகரங்களை நோக்கி வருவதற்கு வசதியாக அமையும். மேலும் கிராமப்புறங்களில் மழை காலங்களில் நீரை சேமிப்பதற்கும், நிலத்தடி நீரை சரிவூட்டுவதற்கும், விவசாயிகளின் பயன்பாட்டிற்கும், கால்நடைகளின் குடிநீர் ஆதாரத்திற்கும் புதிய குளங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் கரூர் மாவட்டத்திலுள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களிலும் 2024-2025 ஆண்டில் 38 புதிய குளங்கள் ரூ.376.6 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது என கலெக்டர் மீ.தங்கவேல், தெரிவித்தார். இந்நிகழ்ச்சின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன் உடனிருந்தார்



திருச்சி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு அரியமங்கலம் எஸ்.ஐ.டி.யில் இருந்து காட்டூர் கைலாஷ் நகர் வரை நடைபயணம் மாநகர் மாவட்டத் தலைவர் கவுன்சிலர் ரெக்ஸ் தலைமையில் கோட்டத் தலைவர்கள் அரியமங்கலம் அழகர், காட்டூர் ராஜா டேனியல் ராய் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக மாநில செய்தி தொடர்பாளர் திருச்சி வேலுச்சாமி, அகில இந்திய செயலாளர் கிறிஸ்டோபர் திலக், தெற்கு மாவட்டத் தலைவர் வக்கீல் கோவிந்தராஜன், கோட்டத் தலைவர்கள் ஜங்ஷன் பிரியங்கா பட்டேல், உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**Enrollment Notice**

After 10 Days of the publication of this Notice and within Three months There after K.Kaviarasan S/o A.Kanagaraj Aged - 24 Years, permanently residing at No.10/16 Neduchelizhan Street, Nehru Nagar, Velachery, Checkpost, Chennai-600042 intend having my enrollment as an Advocate moved before the bar Council of Tamilnadu,Bar council Building high court campus Chennai - 600104. Those who have any valid Objectons may notify the Same to the Bar council within ten Days.

K.Kaviarasan

**PUBLIC NOTICE**

It is informed that New India Assurance Co. Ltd preferred an Appeal on the order of Dist. consumer Forum-Nellore in **CC No: 64/2021** in the complaint filed by A.Venkata Sukumar Reddy an against New India Assurance Co.Ltd.,M.D. India Health Care Services (TPA) Ltd -Guna Complex, **New Door No:443&445, Old Door No: 304&305**, Anna Salai-Tymanpet - Chennai - 600018 - The Appeal No:123/2024 on the file of State Consumer Forum, Kanuru@ Vijayawada, Andhra Pradesh is Posted on **18-10-2024** for the appearance of 2nd Respondent i.e:M.D.India Health Care Services(TPA)Ltd.

**B.WALTER BARU,** Advocate for Appellant, Brodipet, Guntur, A.P, Cell: 9849304814.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

சென்னை, தரமணியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும்

# விடுதியில் பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு நவீன தொழில் நுட்பங்களை வளர்க்கும் விதமாக நல்லோசை சமூக ஆய்வகங்கள்

## அமைச்சர் மா. மதிவேந்தன் தொடங்கி வைத்தார்




சென்னை அக் 06-

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதியில் பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு கல்வியோடு சேர்ந்து தொழில் வாய்ப்புகளையும், நவீன தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளவும், அவற்றுக்கான தனிப்பயிற்சி மூலம் கல்லூரி படிப்பினை முடித்து வெளியில் செல்லும் போதே வேலை பெறும் திறனை வளர்க்கும் வண்ணம் பயிற்சி வழங்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக "நல்லோசை" சமூக ஆய்வகங்களை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

"நல்லோசை" சமூக ஆய்வகங்களானது அறிவு பூர்வமான சிந்தனைகளை வளர்க்கவும், புதிய வேலை வாய்ப்புகளை பற்றி அறிந்து கொண்டு கல்லூரிக் காலத்திலேயே அதற்கேற்ப மாணாக்கர்களை தயார் செய்து, படிப்பை முடித்து விடுதியில் இருந்து செல்லும் ஒரு மாணவரை கையில் வேலை வாய்ப்புடன் இந்த சமூகத்தில் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டு இன்று தொடங்கி வைக்கப்படுகிறது. எனவே இத்திட்டத்தின் மூலம் மாணாக்கர்கள் தொழிற்திறன் பெற்றவர்களாக மட்டுமின்றி ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியிலும் பங்கு வகிக்கும் சிறந்த மனிதர்களாகவும் உருவாக்கப்படுவார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களின் நலனில் அக்கறை கொண்டு விடுதி மாணாக்கர்களுக்கான உணவுக் கட்டணத்தை ரூ.1100/- இருந்து ரூ.1500/- ஆக உயர்த்தியுள்ளது. மேலும் விடுதி மாணாக்கர் பயன்பெறும் வகையில் "கற்றல் கற்பித்தல் அறைகள்", "நவீன முன்மாதிரி விடுதிகள்", "இணைய வழி நூலகங்கள்" மாணாக்கரை விடுதிக்கு வரவேற்க வரவேற்புத் தொகுப்பு (Welcome Kit) ஆகிய நல்ல திட்டங்களை தமிழ முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. அதில் இந்த "நல்லோசை" மணிமகுடமாக இருக்கும்.

இவ்விழாவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதி திராவிடர் நல இயக்குநர் த. ஆனந்த், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் இயக்குநர் இரா. உமா மகேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விமானப்படை சாகச நிகழ்ச்சி: போக்குவரத்து மாற்றம்

சென்னை அக் 06-

சென்னை மெரினா கடற்கரையில் விமானப்படை சாகச நிகழ்ச்சி நடைபெறுவதையொட்டி போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

1. காமராஜர் சாலையில், காந்தி சிலை மற்றும் போர் நினைவிடம் இடையே அனுமதி சீட்டுகள் உள்ள வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன.

பாஸ் இல்லாத வாகன ஓட்டிகள் பார்க்கிங் ஏற்பாடுகளுக்கு ஆர்.கே.சாலைக்குப் பதிலாக வாலாஜா சாலையைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2. திருவான்மியூரில் இருந்து காமராஜர் சாலை வழியாக பாரிஸை நோக்கி வரும் வாகனங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. அதற்கு பதிலாக, அவர்கள் தங்கள் இலக்கை அடைய சர்தார் படேல் சாலை காந்தி மண்டபம் சாலை அண்ணாசாலையைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதேபோல், பாரிஸில் இருந்து திருவான்மியூர் செல்லும் வாகனங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாறாக, அவர்கள் தங்களுடைய இலக்கை அடைய அண்ணாசாலை தேனாம்பேட்டை காந்தி மண்டபம் வழியாக சென்று தங்கள் இலக்கை அடையலாம்.

3. அண்ணா சிலையிலிருந்து மாநகர பேருந்துகள் வாலாஜா சாலை, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை ரோடு, ரத்னா கஃபே சந்திப்பு, ஐஸ் ஹவுஸ் சந்திப்பு, டாக்டர் நடேசன் சாலை, ஆர்.கே. சாலை, வி.எம். தெரு, மந்தைவெளி, மயிலாப்பூர் வழியாக சென்று தங்கள் இலக்கை அடையலாம்.

4. இதேபோல் கிரீன்வேஸ் பாயின்டிலிருந்து வரும் வாகனங்கள் மந்தைவெளி ஆர்.ஏ. புரம் 2வது பிரதான சாலை

5. சாலை ப்ச்ம்ம்ம் சாலை அண்ணாசாலையை வழியாக சென்று தங்கள் இலக்கை அடையலாம்.

5. வணிக வாகனங்கள் காமராஜர் சாலை, அண்ணாசாலை, சாந்தோம் நெடுஞ்சாலை, ஆர்.கே.சாலை, கதீட்ரல் சாலை, வாலாஜா சாலையில் 7 மணி முதல் 4 மணி வரை தடை செய்யப்பட்டுள்ளது.

சென்னை திருவொற்றியூர் ஆசிரியர் நல சங்கத்திற்கு

# ரூ.50 ஆயிரம் நிதியுதவி: அதிமுக மாமன்ற கவுன்சிலர் கே.கார்த்திக் வழங்கினார்



திருவொற்றியூர் .அக்06

சென்னையை அடுத்த திருவொற்றியூரில் மிகவும் பழமை வாய்ந்த 55ஆண்டுகள் நிறைவு பெற்ற நேருமெட்ரிகுலேஷன்மேல் நிலைப்பள்ளிஆண்டுவிழா சென்னைராஜாஅண்ணாமலைமன்றத்தில் நடைபெற்றது.

பள்ளி தாளாளர் கே. வேணு தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராகஓய்வுபெற்றநீதிபதி டாக்டர்டி.என். வள்ளி விநாயகம் சென்னை உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் டி.நெல்லையப்பன் அதிமுக மாமன்ற கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் சினிமா நடிகை செல்வி அம்மு அபிராமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாகபள்ளிச்செயலாளர் ஆர்.மினிவாவேற்றார். விழாவில் மாணவ மாணவிகளின்கலைநிகழ்ச்சிகள் நாடகம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்நடைபெற்றது.

இந்தப்பள்ளியில்உள்ளஆசிரியர்கள் நலச்சங்கத்திற்கு டாக்டர்கே.கார்த்திக் ரூபாய் 50,000நிதிஉதவிவழங்கினார்.

இந்த விழாவின் சிறப்பு 30 ஆண்டுகளுக்கு முன்பு இதே ஆரம்ப பள்ளியில்படித்த மாமன்ற கவுன்சிலர் டாக்டர்கே.கார்த்திக்இந்தபள்ளி ஆசிரியர்கள் நலசங்கத் தலைவராகதேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.விழாமுடிவில் பள்ளிமுதல்வர்.அகிலாதேவிநன்றிகூறினார்.




சென்னை கிண்டி சிறுவர் இயற்கை பூங்காவில் வனத்துறை சார்பில் வன உயிரின வார விழாவின் துவக்க விழாவினை அமைச்சர் க.பொன்முடி குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து வன உயிரின வார விழா விழிப்புணர்வு தொடர்பான கையேடுகளை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ப.செந்தில் குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் வனத்துறை தலைவர் சீனிவாஸ்ரா ரெட்டி, மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ், கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர் ஆஷிஸ் குமார் ஸ்ரீவத்ஸவா, உயிரின காப்பாளர் மணிஷ் மீனா மற்றும் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்கள், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# துபாய், மலேசியாவில் இருந்து சென்னைக்கு விமானத்தில் கடத்தி வந்த 6 கிலோ தங்கம் பறிமுதல்

## சர்வதேச கடத்தல் கும்பலில் 4 பேர் கைது

சென்னை அக் 06-

துபாய் மற்றும் மலேசியாவில் இருந்து சென்னைக்கு விமானங்களில் கடத்திக் கொண்டு வரப்பட்ட ரூ.4.2 கோடி மதிப்புள்ள 6 கிலோ தங்கம் சென்னை விமான நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்டது. துபாய் மற்றும் மலேசியாவில் இருந்து, பெரும் அளவு தங்கம், சென்னைக்கு விமானத்தில் கடத்திக் கொண்டு வரப்படுவதாக, சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகளுக்கு, மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் ரகசிய தகவல் கொடுத்தனர். இதையடுத்து சுங்க அதிகாரிகள், கடந்த சில தினங்களாக தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.இந்நிலையில் கடந்த இரு தினங்களுக்கு முன்பு, மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து தனியார் பயணிகள் விமானம் ஒன்று, சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தது. அதில் வந்த பயணிகளை சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்தனர். அப்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த 2 ஆண் பயணிகள், மலேசியா நாட்டு சுற்றுலா பயணிகள் விசாவில் சென்று விட்டு, இந்த விமானத்தில் திரும்பி வந்தனர். அவர்கள் மீது சுங்க அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது.அவர்களை நிறுத்தி விசாரித்த போது அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பேசினர். இதனால் அவர்களுடைய உடைமைகளை சோதனையிட்டனர். அப்போது இரண்டு பேருடைய சூட்கேஸ்களிலும் ரகசிய அறைகள் இருந்ததை கண்டுபிடித்தனர். அதை உடைத்துப் பார்த்தபோது, தங்கக் கட்டிகள் மறைத்து வைக்கப்பட்டு இருந்தன. மொத்தம் 3 கிலோ எடை உடைய தங்க கட்டிகள் இருந்தது. அதன் சர்வதேச மதிப்பு ரூ.2.1 கோடி. இதையடுத்து சுங்க அதிகாரிகள், கடத்தல் பயணிகள் இரண்டு பேரையும் கைது செய்த, தங்கத்தையும் பறிமுதல் செய்தனர்.அதோடு அவர்களிடம் மேலும் தொடர்ந்து விசாரணை நடத்திய போது, துபாயிலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருக்கும் மற்றொரு பயணிகள் விமானத்தில் மேலும் 2 பயணிகள் இது போல் தங்கம் கடத்தி வருவதாக தகவல் தெரிவித்தனர். எனவே, சுங்க அதிகாரிகள் தயார் நிலையில் இருந்தனர். துபாயிலிருந்து சென்னை வரும் தனியார் பயணிகள் விமானம் சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியதும், சந்தேகத்துக்கு இடமான இரண்டு ஆண் பயணிகளையும் நிறுத்தி விசாரித்தனர்.அவர்களின் சூட்கேஸ்களை திறந்து பார்த்து சோதித்தபோது, அவர்களின் சூட்கேஸ்களிலும் ரகசிய அறைகள் இருந்தன. அதை உடைத்து பார்த்தபோது 3 கிலோ தங்க கட்டிகள் இருந்தன.

அதன் சர்வதேச மதிப்பு ரூ.2.1 கிலோ. இதை தொடர்ந்து, சுங்க அதிகாரிகள் அவர்களை கைது செய்து, தங்க கட்டிகளை பறிமுதல் செய்தனர். மேலும் விசாரணையில், இவர்களும் மலேசிய நாட்டிலிருந்து வந்த இரண்டு கடத்தல் பயணிகளும், ஒரே கடத்தல் கும்பலை சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் தங்கம் கடத்தும் சர்வதேச கும்பலிடம், கூலிக்காக கடத்தலில் ஈடுபட்டுள்ளதும் தெரியவந்தது.இதையடுத்து சுங்க அதிகாரிகள் 4 சர்வதேச கடத்தல் கும்பலை சேர்ந்தவர்களும், சென்னையில் தங்க கட்டிகளை யாரிடம் கொடுப்பதற்காக எடுத்து வந்தனர். சர்வதேச கடத்தல் கும்பலை சேர்ந்தவர்கள் சென்னையில் எங்கு தங்கி உள்ளனர் என்று தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். சென்னை விமான நிலையத்தில் ஒரே நாளில் அடுத்தடுத்து துபாய், மலேசியாவிலிருந்து வந்த 2 விமானங்களில், ரூ.4.2 கோடி மதிப்புடைய 6 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டு, சர்வதேச தங்கம் கடத்தும் கும்பலைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மடிப்பாக்கம் பகுதியில்

# காரில் குட்கா பாக்கெட்டுகள் கடத்தி வந்த 2 பேர் கைது

சென்னை அக் 06-

மடிப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் சென்னை, மடிப்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகே கண்காணித்தபோது, அவ்வழியே வந்த மாருதி ஸ்விப்ட் காரை நிறுத்தி விசாரணை செய்தபோது, காரில் வந்த 1 பெண் உட்பட 2 நபர்களும் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தனர். சந்தேகத்தின்பேரில், அவர்களது காரை சோதனை செய்தபோது, காருக்குள் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், சட்டவிரோதமாக குட்கா பாக்கெட்டுகள் கடத்தி வந்த 1.ராஜேஷ், 2.கௌதமி, ஆகிய 2 பேரை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 1,014 கிலோ எடை கொண்ட ஹான்ஸ், கூலிப், வி1, விமல் உள்ளிட்ட குட்கா பாக்கெட்டுகள், பணம் ரூ.31,750 மற்றும் 2 செல்போன்கள் மற்றும் 1 கார் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் பெங்களூரிலிருந்து மேற்படி குட்கா பாக்கெட்டுகளை காரில் கடத்தி வந்தது தெரியவந்தது.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய முக்கிய எதிரியை பிடிக்க காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட 2 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

சென்னையில்

# 24 காவல் ஆய்வாளர்கள் பணியிட மாற்றம்

சென்னை அக் 06-

சென்னை முழுவதும் 24 காவல் ஆய்வாளர்களை பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, காவல் ஆய்வாளர்கள் 24 பேரை பணியிடமாற்றம் செய்து சென்னை காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, காவல் ஆய்வாளர் எஸ்.புவனேஸ்வரி என்2 காசிமேட்டு காவல் நிலையத்தில் இருந்து கிண்டிக்கு பணியிடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும், காவல் ஆய்வாளர் ஆர்.ரஞ்ஜித் குமார்- மாம்பலம், எஸ், விவேகானந்தன் - தண்டையார்பேட்டை, முகமது புஹாரி- திருவான்மியூர், மணிவண்ணன்- மெரினா, அரோக்கிய மேரி- குற்றப் பதிவுப் பணியகம், ஆனந்தன்- அயனாவரம், அம்பேத்கர்- புலியந்தோப்பு, ஆனந்தபாபு- திருவொற்றியூர், வீரம்மால்- சவுந்தரபாண்டியனார் அங்காரி ஆகிய இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

காவல் ஆய்வாளர் அருள் ராஜ்- மதுரவாயல், வசந்த ராஜா- காசிமேடு, ஞான சித்ரா- சிசிபி, ஸ்ரீநிவாசன்- கீழ்பாக்கம், கண்ணன்- கொருக்குபேட், கருணாகரன்- நுங்கம்பாக்கம், கே. எஸ்.ராஜா ஜேஜே நகர், ஜெயபிரகாஷ்- ஓட்டேரி, ஹரிஹரன்- பூக்கடை, ஜானி செல்லப்பா- மாதாவரம், ரெஜினா- விருகம்பாக்கம், பிரசித் தீபா- புழல், செல்வகுமாரி- வளசரவாக்கம், ஸ்ரீ ஜெயலாலி- எம்கேபி நகர் ஆகிய இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



# மெரினா கடற்கரையில் விமானப்படை சாகச நிகழ்ச்சி : அண்ணா சதுக்கத்திற்கு சிறப்பு பேருந்துகள் இயக்கம்

சென்னை அக் 06-

மெரினா கடற்கரையில் நடைபெறும் விமானப் படை சாகச நிகழ்வுகளை காண பொதுமக்கள் நலன் கருதி, அண்ணா சதுக்கத்திற்கு மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "இந்திய விமானப் படை தினத்தை முன்னிட்டு, இன்று 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று, சென்னை மெரினா கடற்கரையில் நடைபெறும் விமானப்படை சாகச நிகழ்வுகளை காண வரும் பொதுமக்களின் நலன் கருதி, மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பாக காலை 8:00 மணி முதல் சென்னையின் பல்வேறு பகுதிகளில் இருந்து அண்ணா சதுக்கத்திற்கு வழக்கமாக இயக்கப்படும் 120 பேருந்துகளுடன் கூடுதலாக 75 பேருந்துகளும், அரசினர் பூங்கா மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் டி.எம்.எஸ் மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 25 சிற்றுந்துகளும் (Small Bus) இயக்கப்பட உள்ளது.அரசினர் பூங்கா மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து சென்னை பல்கலைக்கழகம் வரை 3 நிமிட இடைவெளியில் சிற்றுந்துகளும், அதேபோல், டி.எம்.எஸ் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து டாக்டர் ராதா கிருஷ்ணன் சாலையில் உள்ள வி.எம்.தெரு வரை 2 நிமிட இடைவெளியில் மொத்தம் 25 சிற்றுந்துகள் இயக்கப்பட உள்ளன.மேலும், முக்கிய பேருந்து நிலையங்களில் அலுவலர்களை நியமித்து பேருந்துகள் இயக்கத்தினை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் இந்த பேருந்து வசதியினை பயன்படுத்தி சிரமமின்றி பயணிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. " என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தண்டையார்பேட்டை பகுதியில் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர் கைது

சென்னை அக் 06-

பல்வேறு நாடுகளில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை சேர்ந்த ஒருவர், தண்டையார்பேட்டை வினோபா நகரில் தங்கி இருப்பதாக ஆர்.கே.நகர் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில், போலீசார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி, தண்டையார்பேட்டை வினோபா நகர் 11வது தெருவில் வசித்து வந்த சேட்டு (எ) அப்துல் ரஹீம் (32) என்பவரை பிடித்து விசாரணை மேற்கொண்டனர். அதில், தடை செய்யப்பட்ட ஹிஸ் புத்தஹீர் என்ற அமைப்புடன் இவர் தொடர்பில் இருப்பதும், மேலும், அப்பகுதியில் இளைஞர்களுக்கு மூளை சலவை செய்து, தடை செய்யப்பட்ட அமைப்பில் உறுப்பினராக சேர்க்க முயற்சி செய்து வந்ததும் தெரிந்தது. அதுமட்டுமின்றி, இரு மதங்களுக்கு இடையே மோதலை உருவாக்கவும், அரசுக்கு எதிராக சட்ட விரோத செயல்களை தூண்டும் வகையிலும் ஈடுபட்டு வந்தது தெரிந்தது.

குறிப்பாக, இங்குள்ள ஒரு மசூதியில் இமாமாக இருந்து கொண்டு பிரிவினையை ஏற்படுத்தும் விதமாக பேசி வந்துள்ளார்.

அதனால் மசூதி நிர்வாகம் இவரை அங்கிருந்து நீக்கியதும் தெரியவந்தது. இதையடுத்து, வண்ணாரப்பேட்டை போலீஸ் உதவி கமிஷனர் அலுவலகத்தில் வைத்து, அந்த வாலிபரிடம் விசாரணை நடத்தப்பட்டது. பின்னர், அவரது வீட்டில் சோதனை செய்தபோது கிலாபத் ஆட்சியை இஸ்லாமிய ஆட்சியை உலகம் முழுவதும் கொண்டு வரவேண்டும் என்பது தொடர்பான குறிப்புகள் மற்றும் ஐரோப்பாவின் மார்க்கம் ஆகிய பல்வேறு புத்தகங்கள், கத்தி, செல்போன் ஆகியவை கைப்பற்றப்பட்டன. பின்னர், இவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மாதவரத்தில் செல்போன் பறித்த 2 பேர் கைது

சென்னை அக் 06

சென்னை, வண்ணாரப்பேட்டை, போஜராஜன் நகர் 2வது தெருவில் வசித்து வரும் கமலகண்ணன், என்பவரும், இராயப்பேட்டையைச் சேர்ந்த ஹபீப் பாஷா என்பவரும் கல்லூரியில் படித்துக் கொண்டே, மாதவரம் பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலை செய்து வருகின்றனர். கமலகண்ணனும், ஹபீப் பாஷாவும் 3 ந் தேதி அன்று நள்ளிரவு வேலை முடித்து வீட்டிற்கு செல்வதற்காக மாதவரம், ஜி.என்.டி. ரோடு, தட்டான்குளம், கல்பனா பேருந்து நிறுத்தத்தில் இருந்து ஷேர் ஆட்டோவில் ஏறி சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது மேற்படி ஷேர் ஆட்டோவில் ஏற்கனவே இருந்த 2 நபர்கள், கமலகண்ணனையும், ஹபீப் பாஷாவையும் கையால் தாக்கி, தாங்கள் மறைத்து வைத்திருந்த கத்தியைக் காட்டி மிரட்டி கமலக்கண்ணன் மற்றும் ஹபீப் பாஷா ஆகியோரது 2 செல்போன்களை பறித்துக் கொண்டு, மூலக்கடை அருகே ஆட்டோவிலிருந்து இறக்கி விட்டு ஆட்டோ ஓட்டுநர் உட்பட 3 எதிரிகளும் ஆட்டோவில் தப்பிச் சென்றனர். இது குறித்து இருவரும், மாதவரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், மாதவரம் போலீசாரால் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மாதவரம் காவல் நிலைய குற்றப் பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழிப்பறி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.விக்னேஷ், 2.அஜய்,

ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரர்களின் 2 செல்போன்கள், குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி மற்றும் மேற்படி ஆட்டோ பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிர விக்னேஷ் மீது ஏற்கனவே 6 திருட்டு வழக்குகள் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட மேற்படி 2 பேரை விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய மற்றொரு நபரை பிடிக்க காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# நடிகை சோனா வீட்டில் புகுந்து மிரட்டிய 2 பேர் கைது

சென்னை அக் 06-

சென்னை, மதுரவாயல், கிருஷ்ணா நகர் 28வது தெருவில் சோனா ஹெரிடென், என்பவர் வசித்து வருகிறார். சோனா ஹெரிடென் 3 ந் தேதி அன்று மாலை வீட்டிலிருந்தபோது, யாரோ 2 பேரும் வீட்டின் உள்ளே சுவர் ஏறி குதித்து,

அங்கு சுவற்றில் பொருத்தியுள்ள குளிரூட்டியின் வெளிப்புற யூனிட் பகுதியை கழற்றிக் கொண்டிருந்த சத்தம் கேட்டு, சோனா ஹெரிடென் யார் என்று குரல் கொடுத்து கொண்டே வரும்போது, 2 பேரும் சுவர் ஏறி குதித்து தப்பிச் சென்றனர். இது குறித்து சோனா ஹெரிடென், மதுரவாயல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், மதுரவாயல் போலீசாரால் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.மதுரவாயல் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர்

தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற வழக்கில் தொடர்புடைய 1.லோகேஷ், 2.சிவா, ஆகிய 2 பேரை கைது செய்தனர்.

### 3 போட்டிகள் கொண்ட தொடர்:

# இந்தியா - வங்காளதேசம் இன்று முதல் டி-20 போட்டியில் மோதல்



**குவாலியர், அக். 06-**

சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய அணி 20 ஓவர் தொடரையும் வெல்லுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்தியா-வங்காளதேசம் இடையேயான முதல் டி-20 போட்டி குவாலியரில் இன்று நடைபெறுகிறது.

**சுற்றுப்பயணம்...**

வங்காளதேச கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 2 டெஸ்ட் கொண்ட தொடரை இந்தியா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. சென்னையில் நடந்த முதல் டெஸ்டில் 280 ரன் வித்தியாசத்திலும், கான்பூரில் நடைபெற்ற 2-வது டெஸ்டில் 7 விக்கெட் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றது. இந்தியா-வங்காளதேசம் இடையேயான 3 போட்டி கொண்ட 20 ஓவர் தொடரில் முதல் ஆட்டம் மத்தியபிரேச மாநிலம் குவாலியரில் இன்று ( 6-ந் தேதி) நடக்கிறது.

**வெல்லுமா..?**

சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய அணி 20 ஓவர் தொடரையும் வெல்லுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. வெற்றியுடன் கணக்கை தொடங்கும் ஆர்வத்தில் இருக்கிறது. இந்திய அணி கடந்த ஜூலை மாதம் இலங்கையை அதன் சொந்த மண்ணில் 20 ஓவர் தொடரில் 3-0 என்ற கணக்கில் முழுமையாக வென்று சாதித்தது. அதே நிலை இந்த தொடரிலும் நடைபெறலாம் என்று கருதப்படுகிறது.

**பும்ராவுக்கு....**

சுப்மன்கில், பும்ரா உள்ளிட்டவர்களுக்கு 20 ஓவர் தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. வேகப்பந்து வீரர் மயங் யாதவ் மீது அவர் எதிர்பார்ப்பு உள்ளது. டெஸ்ட் தொடரை இழந்த நஜூமுல் உசேன் ஷான்டோ தலைமையிலான வங்காளதேச அணிக்கு 20 ஓவர் தொடரிலாவது வெற்றி பெற வேண்டிய நெருக்கடி இருக்கிறது. இரு அணிகளும் 20 ஓவர் போட்டியில் மோதுவது இது 15-வது முறையாகும். இதுவரை நடந்த 14 ஆட்டத்தில் இந்தியா 13-ல், வங்காளதேசம் 1-ல் வெற்றி பெற்றுள்ளன. இன்று போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது. ஸ்போர்ட்ஸ் 18 மற்றும் ஜியோ சினிமாவில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

**இரு அணி வீரர்கள் வருமாறு:-**

**இந்திய அணி:**

சூர்யகுமார் யாதவ் (கேப்டன்), அபிஷேக் சர்மா, ரியான் பராக், ஷிவம் துபே, ஜிதேஷ் சர்மா, ரிங்குசிங், ஹர்திக் பாண்ட்யா, வாஷிங்டன் சுந்தர், நிதிஷ்குமார் ரெட்டி, அர்ஷ்தீப் சிங், ஹர்சித் ராணா, ரவி பிஷ்னோய், வருண் சக்கரவர்த்தி, மயங்க் யாதவ்.

**வங்காளதேசம்:**

நஜூமுல் உசேன் ஷான்டோ, ஜாகர் அலி, லிட்டன் தாஸ், பர்வேஷ் உசேன், தன்ஜித் ஹசன், தவ்கீத் ஹிர்தோய், மெகிதி ஹசன், மகமதுல்லா, மிராஸ், முஷ்டாபிசுர் ரகுமான், ரகிபுல் ஹசன், நிஷந்த் உசேன், ஷோரிபுல் இஸ்லாம், தன்சிம், தக்ஷின் அகமது.

### 27 ஆண்டுகளுக்கு பிறகு

# இரானி கோப்பையை கைப்பற்றிய மும்பை




**லக்னோ, அக். 06-**

27 ஆண்டுகளுக்கு பிறகு இரானி கோப்பையை கைப்பற்றியது மும்பை அணி. இரட்டை சதம் அடித்த சர்பராஸ் கான் ஆட்டநாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்

மும்பை-ரெஸ்ட் ஆப் இந்தியா அணிகளுக்கு இடையிலான இரானி கோப்பை தொடருக்கான டெஸ்ட் போட்டி லக்னோவில் நடைபெற்று வருகிறது. இந்த போட்டி கடந்த 1ம் தேதி தொடங்கியது. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த மும்பை தனது முதல் இன்னிங்சில் 537 ரன்கள் குவித்தது. மும்பை தரப்பில் அதிகபட்சமாக சர்பராஸ் கான் 222 ரன் எடுத்தார்.

**416 ரன்னுக்கு அவுட்....**

இதையடுத்து தனது முதல் இன்னிங்சை ஆடிய ரெஸ்ட் ஆப் இந்தியா தனது முதல் இன்னிங்சில் 3-வது நாள் முடிவில் 4 விக்கெட்டுக்கு 289 ரன்கள் எடுத்திருந்தது. அபிமன்யு ஈஸ்வரன் 151 ரன்னுடனும், துருவ் ஜூரெல் 30 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். இந்நிலையில், நேற்று 4வது நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் தொடர்ந்து பேட்டிங் செய்த ரெஸ்ட் ஆப் இந்தியா தனது முதல் இன்னிங்சில் 416 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது.

**ஆட்டம் டிராவில்...**

இதையடுத்து 121 ரன் முன்னிலையுடன் தனது 2வது இன்னிங்சை தொடங்கிய மும்பை அணி 4ம் நாள் ஆட்ட நேர முடிவில் 40 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 153 ரன் எடுத்துள்ளது. மும்பை இதுவரை 274 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. சர்பராஸ் கான் 9 ரன்னுடனும், தனுஷ் கோடியன் 20 ரன்னுடன் களத்தில் இருந்தனர். நேற்று 5வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து விளையாடிய மும்பை அணி 5வது நாள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 329 ரன்கள் எடுத்தது. இதனால் ஆட்டம் டிராவில் முடிந்தது.

**மும்பை அணி...**

போட்டி டிராவில் முடிந்தாலும் முதல் இன்னிங்சில் அதிக ரன்கள் எடுத்த மும்பை அணி இரானி கோப்பையை வென்றது. முதல் இன்னிங்சில் இரட்டை சதம் அடித்த சர்பராஸ் கான் ஆட்டநாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன்மூலம் 27 ஆண்டுகளுக்கு பிறகு மும்பை அணி இரானி கோப்பையை கைப்பற்றியுள்ளது.

### மகளிர் டி-20 உலக கோப்பை:

# இந்தியா - பாக்., இன்று மோதல்




**துபாய், அக். 06-**

இந்திய அணி தனது 2-வது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான எதிர்கொள்கிறது.

**10 நாடுகள்...**

9-வது மகளிர் 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள ஷார்ஜா, துபாயில் நடைபெற்று வருகிறது. கடந்த 3-ந்தேதி தொடங்கிய பெண்கள் 20 ஓவர் உலக கோப்பையில் 10 நாடுகள் பங்கேற்றுள்ளன.

அவை 2 ஆக பிரிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம்: ஏ பிரிவு : நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா, இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை. பி பிரிவு: இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, வெஸ்ட் இண்டீஸ், வங்காளதேசம், ஸ்காட்லாந்து.

**தலா ஒரு முறை...**

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும் 'லீக்' முடிவில் இரண்டு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும். தொடக்க நாள் ஆட்டங்களில் வங்காளதேச அணி 16 ரன்னில் ஸ்காட்லாந்தையும், பாகிஸ்தான் 31 ரன்னில் இலங்கையும் தோற்கடித்தன. நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய அணி 58 ரன் வித்தியாசத்தில் நியூசிலாந்திடம் மோசமாக தோற்று மற்றொரு போட்டியில் தென் ஆப்பிரிக்கா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டீசை வீழ்த்தியது.

**வெற்றி பெறுமா?**

இந்திய அணி 2-வது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தானை இன்று (ஞாயிற்றுக்கிழமை) எதிர்கொள்கிறது. மாலை 3.30 மணிக்கு துபாயில் இந்த ஆட்டம் நடக்கிறது. இந்திய அணி பாகிஸ்தானை வீழ்த்தி முதல் வெற்றியை பெறுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. இரு அணிகளும் 20 ஓவர் போட்டியில் இதுவரை 15 முறை மோதியுள்ளன. இதில் இந்தியா 12-ல் பாகிஸ்தான், 3-ல் வெற்றி பெற்றுள்ளன. பாகிஸ்தான் அணி தொடக்க ஆட்டத்தில் இலங்கையை வீழ்த்தி இருந்தது. இதனால் இந்தியாவை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும். இன்று நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீஸ்-ஸ்காட்லாந்து அணிகள் மோதுகின்றன.

### பெண்கள் டி20 உலகக் கோப்பை லீக்:

# ஆஸ்திரேலியா அபார வெற்றி

**ஷார்ஜா, அக். 06-**

பெண்கள் டி20 உலகக் கோப்பை லீக் போட்டியில் இலங்கை அணியை வீழ்த்தி ஆஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**அடுத்தடுத்து அவுட்...**

9-வது பெண்கள் டி20 உலகக் கோப்பை தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் மற்றும் சார்ஜாவில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இந்த தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரேலியா - இலங்கை அணிகள் மோதின.

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற இலங்கை அணியின் கேப்டன் சமரி அதபத்து பேட்டிங்கை தேர்வு செய்தார். அதன்படி இலங்கை அணி முதலில் பேட்டிங் செய்தது. தொடக்கம் முதல் ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இலங்கை அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து. இதனால் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 93 ரன்கள் எடுத்தது.

**அபார வெற்றி...**

அந்த அணியில் நிலாக்ஷி சில்வா 29 ரன்களும் ஹர்ஷிதா 23 ரன்களும் எடுத்தனர். ஆஸ்திரேலியா சார்பில் மேகன் ஸ்கட் 3 விக்கெட், மொலினஸ் 2 விக்கெட்களை வீழ்த்தினர். தொடர்ந்து 94 ரன்கள் இலக்குடன் விளையாடிய ஆஸ்திரலிய அணி அதிரடியாக விளையாடி 14.2 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 94 ரன்கள் எடுத்தது. இதனால் ஆஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது . அந்த அணியில் பெத் மூனே 43 ரன்கள் குவித்தார் .

# வாக்களித்த மனு பாக்கர்



2024 பாரீஸ் ஒலிம்பிக்கில் தனிநபர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவு என துப்பாக்கி சுடுதலில் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்று அசத்தினார் மனு பாக்கர். மேலும், ஒரே ஒலிம்பிக்கில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையையும் அவர் படைத்தார். இந்நிலையில் நேற்று அரியானா தேர்தலில் முதல்முறையாக வாக்களித்தப்பின் பேட்டியளித்த மனு பாக்கர் கூறியதாவது., நமது நாட்டின் இளைஞர்களாக இருக்கும் நாம் வாக்களிப்பது நமது கடமை. உங்களுக்கு யார் சிறந்த தலைவராக, சிறந்த வேட்பாளராக தோன்றுகிறதோ அவர்களுக்கு வாக்களியுங்கள்.

நமது சிறிய முயற்சிதான் பெரிய இலக்குகளுக்கு வித்திடும். முன்னேற்றம் நமது கைகளில் இருக்கிறது. ஏனெனில் நாம் தேர்ந்தெடுக்கும் தலைவர்கள்தான் நமது கனவை நிறைவேற்றுவார்கள். நான் முதன்முதலாக வாக்களித்துள்ளேன். வாக்களிக்க நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன்.

வாக்களித்தில் மகிழ்ச்சியும் அடைகிறேன் என்றார். தனது எக்ஸ் பக்கத்தில் இளைஞர்கள் அனைவரும் வாக்களிக்க கோரிக்கை விடுத்திருந்தார். விருது வென்ற மனு பாக்கர் இந்தியா முழுவதும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். சென்னையிலும் ஒரு நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

### உ.பி. உள்ளிட்ட 5 மாநிலங்களில்

# என்.ஐ.ஏ. திடீர் சோதனை

**புதுடெல்லி, அக். 06-**

நாடு முழுவதும் 5 மாநிலங்களில் 22 இடங்களில் என்.ஐ.ஏ. சோதனை நடத்தியது. நாட்டில் பயங்கரவாத சதித்திட்டம் பற்றிய விசாரணையின் ஒரு பகுதியாக இந்த சோதனை நடத்தப்பட்டது.

நாடு முழுவதும் தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) நேற்று காலை முதல் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். என்.ஐ.ஏ.வுக்கு கிடைத்த உளவு தகவலின் அடிப்படையில், ஜம்மு-காஷ்மீர், மராட்டியம், டெல்லி, உத்தர பிரதேசம் மற்றும் அசாம் ஆகிய 5 மாநிலங்களில் 22 இடங்களில் இந்த சோதனை நடந்தது.

பயங்கரவாத சதித்திட்டம் பற்றிய விசாரணையின் முக்கிய முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த சோதனை நடந்தது. இதில் பயங்கரவாத குழுக்களுடன் தொடர்பில் உள்ளவர்கள் என கூறப்படும் முக்கிய நபர்கள், நிறுவனங்களில் இந்த சோதனை நடைபெற்றது. இந்த சோதனையில், அடுத்து என்ன சதி திட்டங்கள் தீட்டப்பட்டு உள்ளன? அல்லது என்னென்ன தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன? என்பன உள்ளிட்ட விவரங்கள், முக்கிய சான்றுகள் ஆகியவற்றை சேகரிக்கும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டனர்.

உள்நாட்டு பாதுகாப்பில் அச்சுறுத்தல்கள் அதிகரித்து வரும் சூழலில் இந்த சோதனை முக்கியத்துவம் பெற்றுள்ளது. நாட்டில் செயல்பட்டு வரும் ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத அமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்பில் உள்ளவர்கள் பற்றி இந்த சோதனை நடந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

### உத்தரகாண்ட்டில் சோகம்:

# பேருந்து கவிழ்ந்து 30 பேர் பலி

**டேராடூன், அக். 06-**

உத்தரகண்ட் மாநிலத்தில், திருமண வீட்டார் சென்ற பேருந்து 200 அடி பள்ளத்தில் உருண்டு விழுந்த சம்பவத்தில், அதிலிருந்த 30 பேர் வரை பலியாகியிருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

திருமண வீட்டார் வந்த பேருந்து வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு விபத்தில் சிக்கியதாகவும், விபத்து நேரிட்டபோது பேருந்துக்குள் 50 முதல் 55 பேர் வரை இருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பேருந்து, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த பள்ளத்தில் விழுந்ததாகவும், இந்த விபத்தில் பேருந்தில் இருந்த பெரும்பாலானோர் பலியாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உள்ளூர் மக்களுடன் காவல்துறையினரும், மாநில பேரிடர் மீட்புப் படையினரும் இணைந்து சம்பவ இடத்தில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விபத்து நிகழ்ந்த இடம், மணமகள் வீட்டிலிருந்து ஒரு சில கிலோ மீட்டர்தான் என்றும், ஹரித்வார் மாவட்டம் லால்தாங்கிலிருந்து பௌடியின் பிரோன்கல் நோக்கி பேருந்து சென்றுகொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. மலைப் பிரதேசமான உத்தரகண்ட் மாநிலத்தில், அவ்வப்போது சாலை விபத்துகளும், அதிகமாக சாலையோர பள்ளத்தில் வாகனங்கள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாவதும் அதிகமாக நடைபெறுகிறது. மலைப் பிரதேசம் என்பதால், சாலைப் போக்குவரத்தைத் தவிர வேறு எந்த வழியும் இல்லாதது மற்றும், கரணம் தப்பினால் மரணம் என்ற வகையில்தான் பல சாலைகள் அமைந்திருக்கின்றன என்பதும் உண்மை.

### சென்னையில் ரூ.63 ஆயிரத்து 246 கோடி மதிப்பிலான

# மெட்ரோ 2-ம் கட்ட பணிக்கு 65 சதவீத நிதி வழங்க முடிவு

## மத்திய அரசு அறிவிப்பு

**டெல்லி, அக். 06-**

சென்னையில் ரூ.63 ஆயிரத்து 246 கோடி மதிப்பிலான மெட்ரோ 2-ம் கட்ட பணிக்கு மொத்த மதிப்பீட்டில் 65 சதவீத நிதியை வழங்கவுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ 2ம் கட்ட திட்ட பணிகளுக்கு மத்திய அரசு கடந்த 3ம் தேதி ஒப்புதல் அளித்தது. பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இந்த திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் இப்பணிகளுக்கு மத்திய அரசு நிதி வழங்க வேண்டும் என்று தமிழக அரசு கோரிக்கை விடுத்து வந்தது. அந்த கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுள்ளது. அதன்படி, சென்னை மெட்ரோ 2ம் கட்ட பணிக்கான மொத்த மதிப்பீட்டில் 65 சதவீத நிதியை மத்திய அரசு வழங்குகிறது.

இது தொடர்பாக மத்திய அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னை மெட்ரோ ரெயில் 2-ம் கட்ட மதிப்பீட்டுச் செலவில் 65 சதவீதத்தை மத்திய அரசு வழங்குகிறது. மொத்தம் ரூ. 63,246 கோடி மதிப்பீட்டுச் செலவில் 'மத்திய துறை' திட்டமாக, சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு அண்மையில் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதுவரை இந்த திட்டம், மதிப்பிடப்பட்ட திட்டச்செலவில் சுமார் 90 சதவீதம் அளவிற்கு திட்ட நிதியுதவி முதன்மையாகத் தமிழ்நாடு அரசின் பொறுப்பு என்ற நிலையில் 'மாநிலத் துறை' திட்டமாக செயல்படுத்தப்பட்டு வந்தது.

மெட்ரோ ரெயில் கொள்கை 2017-ன் படி, நிலத்தின் விலை மற்றும் சில பொருட்களைத் தவிர்த்து, திட்டச் செலவில் 10 சதவீதம் நிதியளிப்பதே மத்திய அரசின் பங்காக இருந்தது. இருப்பினும், இருதரப்பு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து மாநில அரசு ரூ.32,548 கோடி கடனாக நிதி திரட்டுவதில் மத்திய அரசு அதற்கு நேரடியாக உதவி செய்துள்ளது. இதில் இதுவரை சுமார் ரூ.6,100 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது.

சமீபத்திய ஒப்புதலின் மூலம், சென்னை மெட்ரோ ரெயில் 2-ம் கட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவில் ஏறத்தாழ 65 சதவீதத்தை இப்போது மத்திய அரசு வழங்குகிறது. இந்த நிதியுதவியில் ரூ.33,593 கோடி முழுக் கடனும், சமபங்கு மற்றும் சார்நிலைக் கடனான (subordinate debt) ரூ.7,425 கோடியும் அடங்கும். எஞ்சிய 35 சதவீத மதிப்பீட்டுச் செலவுக்கு மாநில அரசு நிதியுதவி செய்யும்.

பன்னாட்டு மற்றும் இருதரப்பு மேம்பாட்டு முகமைகளிடமிருந்து பெறப்படும் கடன்கள் மத்திய அரசின் கடனாகக் கருதப்பட்டு, மத்திய அரசின் பட்ஜெட்டிலிருந்து சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட் (CMRL) க்கு நேரடியாக வழங்கப்படும். மத்திய அரசால் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படுவதற்கு முன், திட்டத்திற்கான கடன் நிதி கிடைக்கச் செய்வது அல்லது ஏற்பாடு செய்வது மாநில அரசு குறித்ததாக இருந்தது. மத்திய அமைச்சரவை ஒப்புதலால், இதர வளர்ச்சிப் பணிகளுக்கு ரூ.33,593 கோடி அளவுக்கு நிதியளிக்க மாநில அரசின் பட்ஜெட் நிதி ஆதாரம் விடுவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சரவையின் ஒப்புதலைத் தொடர்ந்து, கடன், திட்ட ஒப்பந்தங்கள் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் மீது மறு பேச்சுவார்த்தை நடத்த, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமை (Japan International Co operation Agency), ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Develop ment Bank), ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank), புதிய வளர்ச்சி வங்கி (New Development Bank) ஆகிய இருதரப்பு மற்றும் பன்னாட்டு முகமைகளை நிதி அமைச்சகம் அணுகும்.

இதற்கான அம்சங்கள் வருமாறு., இந்தக் கடன்களை மாநில அரசுக்கானதாக இல்லாமல் மத்திய அரசுக்கானதாகக் கருதுதல், சம்பந்தப்பட்ட முகமையிடமிருந்து கடன் தொகை மாநில அரசுக்கும் மாநில அரசின் பட்ஜெட்டிலிருந்து சிஎம்ஆர்எல் (CMRL) நிறுவனத்திற்கும் செல்லும் தற்போதைய வழிமுறைக்கு மாறாக, சம்பந்தப்பட்ட முகமையிடமிருந்து மத்திய அரசுக்கும் மத்திய அரசின் பட்ஜெட்டிலிருந்து பாஸ் த்ரூ உதவி (pass-through assistance) என்ற முறையில் நேரடியாக சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட் (CMRL) நிறுவனத்திற்கு செல்லும் வழிமுறையாக மாற்றியமைத்தல்.

சிஎம்ஆர்எல் மூலம் திட்ட செயலாக்க முகமையாக மாநில அரசு இருக்கும் இடத்தில் சிஎம்ஆர்எல் மூலம் திட்ட செயலாக்க முகமையாக மத்திய வீட்டுவசதி, நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் செயல்பட நியமித்தல், கடன், திட்ட ஒப்பந்தங்கள் மற்றும் அது தொடர்பான ஆவணங்களில் இந்த மாற்றங்களுக்கான நடைமுறை தொடங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் ஒத்துழைப்புடன் இது விரைந்து முடிக்கப்படும்.

கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு சிஎம்ஆர்எல் நிறுவனத்தைச் சார்ந்தது. திருப்பிச் செலுத்துதல், பொதுவாக குறைந்தபட்சம் 5 ஆண்டு மாரடோரியம் (moratorium) காலத்திற்குப்பின், அதாவது ஏறத்தாழ திட்டம் முடிந்த பின் தொடங்கும்.

கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலையில் சி.எம்.ஆர்.எல். இல்லாத பட்சத்தில், அந்த ஆண்டுகளில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக அந்த நிறுவனத்திற்கு நிதி உதவி வழங்குவது மாநில அரசின் கடமையாகும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேர்தல் பத்திரங்கள் திட்டம்:

# தீர்ப்பை மறுஆய்வு செய்யக்கோரிய மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி

**புதுடெல்லி, அக். 06-**

தேர்தல் பத்திரங்கள் திட்டத்தை ரத்து செய்த தீர்ப்பை மறுஆய்வு செய்யக்கோரிய மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டன.

தனிநபர்கள், நிறுவனங்கள் தங்களுக்கு விருப்பமான அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையாக நிதி வழங்கும் வகையில் தேர்தல் பத்திரங்கள் திட்டம் கொண்டு வரப்பட்டது. எஸ்.பி.ஐ. வங்கி மூலம் இந்த தேர்தல் பத்திரங்கள் விற்கப்பட்டு வந்தன. ஒவ்வொரு அரசியல் கட்சியும் கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடையை பெற்று குவித்தன.

இதனிடையே, தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் நிதி பெறுவது அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது எனக் கூறி, இந்த தேர்தல் பத்திரங்கள் திட்டத்தை சுப்ரீம் கோர்ட்டு கடந்த பிப்ரவரி மாதம் 15-ந் தேதி ரத்து செய்து உத்தரவிட்டது. இந்நிலையில், இந்த தீர்ப்பை மறுஆய்வு செய்யக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதி சஞ்சீவ் கண்ணா, நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி ஜே.பி.பர்திவாலா மற்றும் நீதிபதி மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தன.

இதனை விசாரித்த நீதிபதிகள் மறுஆய்வு மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். மேலும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில், "மறு ஆய்வு மனுக்களை ஆய்வு செய்ததில், தீர்ப்பின் பதிவுகளில் பிழைக்கான முகாந்திரம் இல்லை. எனவே, சுப்ரீம் கோர்ட்டு விதிகள் 2013-ன் ஆணை XLVII விதி 1-ன் கீழ், மறுஆய்வு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன" என்று தெரிவித்துள்ளனர்.

### மகாராஷ்டிராவில்

# கல்வீச்சு சம்பவத்தில் 21 போலீசார் காயம்

**மும்பை, அக். 06-**

மகாராஷ்டிரத்தில் காவல்துறையினர் மீது சிறுபான்மையினர் நடத்திய தாக்குதலில் 21 போலீசார் காயமடைந்தனர்.

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்து ஆன்மிக குருவான யதி நரசிங்கானந்த் மஹாராஜ் என்பவர், நபிகள் நாயகம் குறித்த அவதூறு கருத்துகளை தெரிவித்ததற்கு எதிர்த்து பலரும் கருத்துகள் தெரிவித்தனர். அவர் மீது வழக்குப்பதிவு செய்யுமாறு காவல்துறையினருக்கு கோரிக்கையும் விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் நரசிங்கானந்த் பேசிய விடியோ சமூக ஊடகங்களில் வைரலானதையடுத்து, அவர் மீது வழக்குப்பதிவு செய்யுமாறு கோரிக்கை விடுக்க சென்ற சிறுபான்மையினர், வெள்ளிக்கிழமை (அக். 4) இரவு 8.15 மணியளவில் மகாராஷ்டிரத்தில் உள்ள அமராவதி நகரில் நாக்புரி கேட் காவல் நிலையத்திற்கு சென்றனர்.

அவர்களுடன் சமாதானப் பேச்சில் ஈடுபட்ட காவல்துறையினர் மீது, சிலர் கற்களைக் கொண்டு வீசி, தாக்குதல் நடத்தினர். இதனைத் தொடர்ந்து, சிறுபான்மையினரைக் கலைப்பதற்காக காவல்துறையினர் தடியடி நடத்தியும், கண்ணீர் புகைக் குண்டுகள் வீசும் முயற்சியிலும் ஈடுபட்டனர்.

காவல்துறையினர் மீது கற்களை வீசி நடத்திய தாக்குதலில், 21 காவல் அதிகாரிகள் காயமடைந்தனர்; 10 காவல் நிலைய வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டன. இறுதியாக, தாக்குதல் நடத்தியவர்களை காவல்துறையினர் கலைத்தனர்.

மேலும், அந்த பகுதியில் பாதுகாப்புப் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக, 1200 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். மேலும், நாக்புரி கேட் பகுதியில் பி.என்.எஸ்.எஸ். பிரிவு 163 கீழ் 5 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்றுகூட தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



சென்னை தலைமைச்செயலகத்தில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், வி.செந்தில்பாலாஜி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, எஸ்.எம்.நாசர், மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணை மேயர், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், சட்டமன்ற உறுப்பினர்கள், துறை செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நடைபெற்று வரும் நவராத்திரி உற்சவத்தின் மூன்றாம் நாளான நேற்று முத்தங்கி அலங்காரத்தில் அம்மன் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

### வடகிழக்கு பருவமழை:

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து துணை முதல்வர் ஆலோசனை

சென்னை, அக். 06-

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து துணை முதல்வா உதயநிதி ஸ்டாலின் நேற்று ஆலோசனை நடத்தினார்.

வடகிழக்கு பருவமழை வரும் 15-ம் தேதி தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு பருவமழை இந்தாண்டு தமிழகத்தில் இயல்பைவிட அதிகமாக பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை கூட்டம் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ. வேலு, தா.மோ. அன்பரசன், செந்தில் பாலாஜி, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர் பாபு, எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய உதயநிதி ஸ்டாலின், மரம் வெட்டும் உபகரணங்களை போதிய அளவில் இருப்பு வைத்திருக்க வேண்டும். மழை நீர் தேங்கும் இடங்களில் மோட்டார்கள், படகுகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு வார்டுகளிலும் மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய வாட்ஸ்அப் குழு உருவாக்க வேண்டும். மீட்பு பணிகளுக்கு தன்னார்வலர்களைப் பயன்படுத்த வேண்டும். அரசு அதிகாரிகள் எப்போதும் மக்களுடன் துணை நிற்கின்றனர் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

தருமபுரி, அக். 06-

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்ததை தொடர்ந்து ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 10 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடகா காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள அணைகளில் இருந்து உபரி நீர் தமிழக காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டு உள்ளது. தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நேற்று முன்தினம் மாலை 8 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

இந்த நிலையில் தமிழக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளான அஞ்செட்டி, கேரட்டி, நாட்றாம்பாளையம், பிலிகுண்டு, ஒகேனக்கல் வனப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்துள்ளது. இதனால் ஒகேனக்கலலுக்கு நீர்வரத்து சற்று அதிகரித்துள்ளது.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து 10 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது. இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐவர் பாணி ஆகிய அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் அருவிகளில் குளித்து மகிழ்ந்தனர்.

மேலும் அவர்கள் பரிசல் சவாரி செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்து பார்த்தனர். சுற்றுலா பயணிகள் மீன் சாப்பாடு வாங்கி குடும்பத்துடன் பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டு மகிழ்ந்தனர்.

நேற்று வழக்கத்தை விட ஒகேனக்கல்லில் கூட்டம் அதிகம் காணப்பட்டது. மீன் விற்பனையும் படுஜோராக நடந்தது. நீர்வரத்தை பிலிக்குண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## காஷ்மீர்-அரியானா தேர்தல்: கருத்துக்கணிப்பு முடிவுகள்

அரியானா, அக். 06-

அரியானா, காஷ்மீரில் காங்கிரஸ் ஆட்சியை பிடிக்கும் என தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பில் தகவல் வெளியாகியுள்ளது.

அரியானாவில் மொத்தமுள்ள 90 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி 59 தொகுதிகளை கைப்பற்றும் என கருத்துக்கணிப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரியானாவில் ஆளும் பாஜகவுக்கு 21 தொகுதிகள் மட்டுமே கிடைக்கும் என கருத்துக்கணிப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியில் மூன்றாவது முறை ஆட்சியைக் கைப்பற்றியது போல, அரியானா மாநிலத்தில் தொடர்ந்து இரண்டு முறை ஆட்சியில் இருந்த பா.ஜ.க மூன்றாவது முறை ஆட்சியைக் கைப்பற்ற கடுமையாக போராடியது.

அதேநேரம் கடந்த இரண்டு முறை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக தொடர்ந்த காங்கிரஸ், இந்த முறை இன்டியா கூட்டணியுடன் வலுவாக உள்ளது. அதனால், அரியானா தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கூட்டணிக்கும் மிக முக்கியமாக கருதப்படுகிறது.

அரியானவை பொறுத்தவரை, பிற்படுத்தப்பட்டோர், விவசாயிகளின் வாக்கு சதவிகிதம் அதிகம்.

இதை அறுவடை செய்யும் நோக்கில் பல திட்டங்களை மத்திய பா.ஜ.க அரசு அறிவித்திருந்தது.

ஆனால், தேர்தல் தொடங்குவதற்கு முன்பே, விவசாயிகள் போராட்டம், அக்னிபாத் திட்ட எதிர்ப்பு, விவசாயிகள் போராட்டம் குறித்து பா.ஜ.க. எம்.பி. கங்கனா ரானாவத்தின் சர்ச்சை கருத்துக்கள், மல்யுத்த வீரர்களின் பரவலான போராட்டம் என பல்வேறு சிக்கல்களை எதிர்க் கொண்டது. அதனால், இந்த தேர்தலில் பல கட்சிகளும், கூட்டணிகளும் தங்கள் இருப்பை தக்க வைத்துக் கொள்ள கடுமையான போராடின.

இதைவிட முக்கியமாக, இந்த தேர்தல் முடிவு, இந்த ஆண்டு இறுதியில் சட்டமன்றத் தேர்தலை சந்திக்கவிருக்கும், மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களின் மனநிலைக்கு ஒரு முன்னோடியாகவே இருக்கும் என அரசியல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

90 சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் வாக்குப்பதிவு நேற்று 6 மணியுடன் நிறைவடைந்த நிலையில், அரியானா தேர்தல் நேற்று மாலை 6 மணியுடன் முடிவுற்ற நிலையில் கருத்துக்கணிப்பு வெளியாகியுள்ளது.

**பிபுள்ஸ் பல்ஸ்**

| | |
|---|---|
| மொத்த இடங்கள் | - 90 |
| காங்கிரஸ் | - 55 |
| பா.ஜ.க. | - 26 |
| ஜனநாயக ஜனதா கட்சி | - 0-1 |
| இந்திய தேசிய லோக் தளம் | - 2-3 |
| மற்றவை | - 3-5 |

**டாய்நிக் பாஸ்கர்**

| | |
|---|---|
| காங்கிரஸ் | - 44-44 |
| பா.ஜ.க. | - 19-29 |
| ஜனநாயக ஜனதா கட்சி | - 0-1 |
| இந்திய தேசிய லோக் தளம் | - 1-5 |
| மற்றவை | - 4-9 |

**துருவ் ரிசர்ச்**

| | |
|---|---|
| காங்கிரஸ் | - 56-64 |
| பா.ஜ.க. | - 27-32 |
| மற்றவை | - 5-6 |

**ரிபப்ளிக் மேட்ரிஸ்**

| | |
|---|---|
| காங்கிரஸ் | - 55-62 |
| பா.ஜ.க. | - 18-24 |
| ஜனநாயக ஜனதா கட்சி | - 0-3. |
| இந்திய தேசிய லோக் தளம் | - 3-6 |
| மற்றவை | - 2-5 |

**ஜம்மு காஷ்மீர் இன்டியா டுடே-சி வோட்டர்**

| | |
|---|---|
| காங்கிரஸ் கூட்டணி | - 40-48 |
| பா.ஜ.க. | - 27-32 |
| மக்கள் ஜனநாயக கட்சி | - 6-12 |
| இதர கட்சிகள் | - 6-11 |

**போல் ஆப் போல்**

| | |
|---|---|
| தேசிய மாநாட்டு கட்சி | - 22-25 |
| மக்கள் ஜனநாயக கட்சி | - 18-20 |
| பா.ஜ.க. | - 24-29 |
| காங்கிரஸ் | - 13 |
| அப்னி கட்சி | - 0 முதல் 2 |
| இதர கட்சிகள் | - 2-3 |
| ஜே.ஜே.பி. | - 0 முதல் 3 |
| லோக்தள் கூட்டணி | - 0 முதல் 6 |



சென்னை தரமணியில் நேற்று, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதியில் பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு நவீன தொழில் நுட்பங்களை வளர்க்கும் விதமாக நல்லோசை சமூக ஆய்வகங்களை, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் க.லட்சுமிபிரியா, ஆதிதிராவிடர் நல இயக்குநர் த.ஆனந்த், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் செயலாளர் இரா.உமா மகேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஜெகதாம்பிகை கோயிலில் பிரதமர் மோடி வழிபாடு

மும்பை, அக். 06-

மகாராஷ்டிர மாநிலம் வாஷிம் மாவட்டத்தில் உள்ள ஜெகதாம்பிகை கோயிலில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று (அக்.5) வழிபாடு மேற்கொண்டார்.

மும்பையில் சுரங்க மெட்ரோ ரயில் சேவை உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்காகப் ஒரு நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி மகாராஷ்டிரம் சென்றார்.

நேற்று காலை நான்டெட் விமான நிலையத்திற்கு வந்த பிரதமரை, பாஜக தலைவர் அசோக் சவான் வரவேற்றார். அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் போஹராதேவிக்குச் சென்றார்.

வாஷிமில் உள்ள ஜெகதாம்பிகை கோயிலில் பிரார்த்தனை மேற்கொண்டார்.

பின்னர், போஹராதேவியில் உள்ள சந்த் செவலால் மகாராஜா மற்றும் சந்த் ராம்ராவ் மகாராஜா ஆகியோரின் நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

மேலும், வாஷிமில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பல்வேறு திட்டங்களையும், அதைத்தொடர்ந்து தாணேவில் பல்வேறு திட்டங்களையும் தொடங்கிவைத்தார்.



தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் 24 மணி நேர மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் நேற்று, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆய்வு மேற்கொண்டார். அருகில் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைவர் க.நந்தகுமார், பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனிஷ்சேகர், இணை மேலாண்மை இயக்குநர் விஷுமகாஜன் உள்ளனர்.



மதுரையில் வரும் 9-ம் தேதி நடைபெறவுள்ள உண்ணாவிரத போராட்டம் குறித்து இளைஞர்களுக்கான 3-வது நாள் பயிற்சி முகாம் திருமங்கலம் டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் அம்மா பேரவையின் சார்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமாருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.